தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி - 2 | திபி. 2015 நளி 24 (9-12-84) 65 காசுகள் இதழ் எண் : 49 | பகுதி 49-50

இப்பொழுதுள்ள தேர்தல்முறை சீரிய குடியரசமைப்புக்குப் பொருந்துவதன்று!

செல்வரும், கொடியவர்களும், தந்திரக்காரர்களுமே தேர்தலில் வெற்றி பெறுகின்றனர்!

நல்லவர்களும், உண்மை உழைப்பாளர்களும், வெற்றி பெறும் வாய்ப்புகள் இல்லை!

கட்சிகளும் சாதி, மத அமைப்புகளைப் போலவே இயங்குகின்றன!

ஒப்போலை இடுவது ஒருவரின் தனிக் கருத்தாக இருக்க வேண்டும்!

யாருக்கு ஒப்போலை இடுவது தமிழர்க்கு நலந்தருவதாகும்?

பாவலரேறு அவர்களின் தேர்தல் பற்றிய தெளிவான கருத்துகள்!

சென்னை: 5 : தேர்தல் வந்துவிட்டது. ஒரு சில கட்சிகளின் நன்மையை எதிர்பார்த்துத் தேர்தலை ஆறேழு மாதங்களுக்கு முன்பாகவே வைத்துவிட்டனர். ஆளுங்கட்சிகள் வசதிகளுக்கேற்ப, தேர்தலை முன்னே பின்னே தள்ளி வைத்துக் கொள்ளலாம் என்பதும், அவர்களுக்கு விருப்பமில்லையானால், ஓர் ஆட்சியையே கவிழ்த்துவிட்டோம் என்றிருப்பதும், மக்களரசுக்கே முரண்பாடான நடைமுறைகள். தேர்தல் அனைவர்க்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதுடன், அனைத்து நிலைகளிலும் நடுநிலையானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும் என்பதே நல்ல குடியரசமைப்புக்கேற்ற சிறந்த மரபாக இருக்கமுடியும். ஆனால், இன்றுள்ள தேர்தல் முறையும், அதையொட்டிய கோட்பாடுகளும் செயல்களும், மக்களுக்கு நலந்தருவன வாயில்லை என்பது, கட்சிகளைச் சார்ந்த நடுநிலை அறிஞர்களாலும் ஒப்புக் கொள்ளப் பெறும் உண்மையாக இருக்கிறது.

நம்மைப் பொறுத்தவரை, தேர்தல் என்பது குடியரசமைப்புக்கே மிகச்சரியான ஒரு வழிமுறையாகும். இதற்கு நிகரான ஆனால் இன்னும் சிறந்ததான ஒரு மாற்றுமுறை கண்டுபிடிக்கும் வரை, இதைத் தவிர்த்தல் என்பதோ, புறக்கணித்தல் என்பதோ சரியான ஒரு செயலாக இருக்க முடியாது "இல்லதுக்கு உள்ளதே மேல்" என்னும்படி, நாம் ஏற்றுக் கொள்ளும்படி மிகச் சரியானதாக இல்லாவிட்டாலும், நாம் புறக்கணிக்கும்படி மிகக் கேடானதாகத் தேர்தல்முறை இல்லை. இதை நாம் சரியாக மதித்துத் திருத்திப் பயன்படுத்திக் கொள்ளாத வகையில் இம்முறை பழுதுபட்டுத்தான் இருக்கும்; இருக்க முடியும். ஆனால், அதற்காகத் தேர்தலையே புறக்கணிப்பது, குடியரசமைப்பு முறையையே குறைவாக மதிப்பிடும் உணர்வை வளர்ப்பதாகி விடும். குடியரசு அமைப்பு தவிர்ந்தால், வல்லதிகார அரசுதான் இன்றைய நிலையில் மேலோங்க முடியும். இந்நிலை வரவேற்கக் கூடியதன்று; அறிவியலுக்கும் மாந்தவியலுக்கும் பொருத்தமானதுமன்று. எனவே இப்பொழுதுள்ள தேர்தலை நாம் விரும்பாமற்போனாலும், அதில் ஈடுபட்டுத்தான் நாம் விரும்புவதை உருவாக்கியாக வேண்டும். சேற்றில் கால் வைக்காமல், சேற்றில் விழுந்தவனை மீட்க இயலாது என்பதே நம் கொள்கை.

இன்றைய தேர்தல் நாம் மதிக்கத்தகுந்த நடைமுறைகளைக் கொண்டிருக்கவில்லை என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இதை யாரும் அவ்வளவு எளிதில் மறுத்து விட முடியாது. இதனை நாம் பாராட்டாமைக்குச் சரியான காரணங்கள் இல்லாமல் இல்லை. அவற்றை ஒருவாறு மக்களுக்குத் தெரிவிப்பதும் நம் கடமையாகிறது. அவை இவை :

1 இப்பொழுதுள்ள தேர்தல், ஒரு முதலாளிய வல்லாண்மைக் குடியரசை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பல ஆயிரங்கோடி உருபாக்களை இதில் ஈடுபடுத்தித் தங்களுக்கு உகந்த பாராளுமன்றத்தையும் சட்டமன்றங்களையும் பெருந்த முதலாளிகள் உருவாக்கிக் கொள்ள இப்பொழுதைய தேர்தல் முறை வாய்ப்பளிக்கிறது.

2. இப்பொழுதுள்ள தேர்தல் முறையால், இந்தியாவின் பெரிய மாநிலமான உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு மேலாளுமை இனத்தவரே, இந்தியாவின் பிற மாநிலங்களை அடக்கி ஆளும்படி மேலதிகாரம் பெற இயலுகிறது. பிற மாநிலத்தவர்கள் என்றும் சிறுபான்மையினராகவே ஆகி விட வேண்டியிருக்கிறது.

3. இன்றைய தேர்தலில் மத ஆளுமை பெறுவதைத் தடுக்க இயலாமல் உள்ளது. குறிப்பாக இந்துமதத்தைச் சார்ந்தவர்களே பெரும்பாலும் வெற்றிபெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது.

- தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் பற்றிய கருத்துகள் ...

4. நாட்டின் எல்லா மாநிலங்களிலும், எல்லாத் தொகுதிகளிலும் பெரும்பாலும் சாதியுணர்வையே அடிப்படையாக வைத்துத் தேர்தல் வேட்பாளர்கள் அமர்த்தப்பெறுகின்றனர். சட்டப்படி மதஆளுமையையும், சாதிஆளுமையையும் தடுத்து நிறுத்த இதுவரை எந்த முயற்சியும் செய்யப்படவில்லை.

5. நடுவணரசில் ஆளுமை பெற்றவர்களே தேர்தலை நடத்துவதால், மக்களைத் தங்கள் கட்சியின் சார்பில் திருப்பிக் கொள்வதற்கும், அதிகாரிகளையும் ஆட்சி இயந்திரங்களையும் தங்கள் சார்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்கும், வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களைத் தம் சார்பாக ஆக்கிக் கொள்வதற்கும் வாய்ப்புகள் நிறைய உண்டு. அவற்றை நடுநிலைமை உணர்வின்றிச் சட்டத்திற்குப் புறம்பாக அவர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

6. ஒப்போலையாளர்களுக்குப் பணம் கொடுப்பதும், விளம்பரங்களைத் தாராளமாகச் செய்து கொள்வதும் தடுக்கப்படாமல் இருப்பதால், பணத்தை ஏராளமாகச் செலவழிப்பவர்களுக்கே வெற்றி வாய்ப்புகள் கிடைக்கின்றன.

7. வேட்பாளர்களுக்குத் தகுதிநிலைகள் சரியாகவும் பொருத்தமாகவும் வரையறுக்கப் படவில்லை. இதனால் கொடுமையானவர்களும், ஒழுக்கக்கேடர்களும், மக்கள் நலத்தொண்டில் அன்பும் உண்மையும், நேர்மையும் இல்லாதவர்களும், பதவி அரசியலால் மக்களிடம் சுரண்டிக் கொழுக்க விரும்புபவர்களும், செல்வர்களிடம் தொடர்பு கொண்டு ஊதியம் பெறும் வாணிகர்களும், பெரிய நிலவுடைமையாளர்களும், மக்களைப் பலவகையான கவர்ச்சிகளாலும், வெறிப் பொருள்களாலும் மயக்குகின்ற பணத்தொழில் நடத்தும் முதலாளிகளும் இன்னோரன்ன பலரும், தேர்தலில் நின்று, அரசியலையும் ஒரு வாணிகமாக்கிக் கொள்ள முடிகிறது. அத்தகையவர்களே தேர்தலில் நிற்க மிகுந்த வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடிகிறது. இந்நிலை அறவே தடுக்கப் படவேண்டும்; இன்னுஞ் சொன்னால் தவிர்க்கப் படவேண்டும். அப்படி ஒருநிலை உருவாகாத வரையில், இப்பொழுதைய தேர்தல்முறை, அதைத் தலையாய அடிப்படையாகக் கொண்டுள்ள குடியாட்சிமுறை-இந்தியாவைப் பொறுத்த அளவில் உண்மையாகவே செயல்படுகின்றதென்று சொல்ல இயலாது.

8. தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு எவ்வகையான பாதுகாப்பும் இல்லை. வேட்பாளர்கள் மிரட்டப்படுகிறார்கள்; அடிக்கப்படுகிறார்கள்; கொலை செய்யப்படுகிறார்கள்; மறைத்து வைக்கப்படுகிறார்கள். இத்தகைய சூழல் இருக்கும் வரை உண்மையான மக்கள் தொண்டர்கள் தேர்தலில் நிற்கத் தயங்கவும் அஞ்சவும் வேண்டியிருக்கும்.

9. தேர்தல் நடக்கும் காலத்தில், ஒப்போலையாளர்களும் பலவகையில் மிரட்டப்படுவதும், ஒட்டுமொத்தமாக விலைக்கு வாங்கப்படுவதும், ஆடுமாடுகளைப் போலத் தன்வயமாக்கப்படுவதும் மிகக் கொடுமையானவையாகும். தேர்த்திருவிழாக்களில் புகுந்து விளையாடும் திருடர்களைப் போலும், மக்களை வேட்பாளர்கள் அலைக்கழிக்கின்றதைத் தடுத்து நிறுத்தும் வகையில், தேர்தல்முறைகள் வரையறுக்கப் படவில்லை; அவ்வாறு ஓரிரு நெறிமுறைகள் வரையறுக்கப் பெற்றிருந்தாலும், அவை வலித்தமான முறையில் செயல்படுத்தப் படுவதில்லை.

10. ஒப்போலைச் சாவடிகளில் வலிந்தகட்சியின் முகவர்களாலும், அவற்றைச் சார்ந்த தேர்தல் அதிகாரிகளாலும், ஒப்பாளர்கள் (வாக்காளர்கள்) திசை திருப்பப் படுகின்றனர். இதை நடைமுறையில் தடுக்க வழியில்லை. ஒவ்வொரு தவறான நடைமுறைக்கும் அறமன்றத்தை நாடுவது நல்ல நெறிமுறையாகாது.

--- இவ்வாறான பல அடிப்படையான காரணங்களால், இன்றைய தேர்தல் ஓர் ஊழல் நிறைந்த முறையிலேயே நடைபெறும்படி உள்ளதால், நாம் இந்நாட்டுத் தேர்தலையே ஒரு நல்ல குடியரசுமுறைத் தேர்தல் என்று ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. சரியான முறையில் குடியரசு அமைப்பு செயல்படுத்தப் பெறவில்லையானால், அந்நிலை, கொடுமையான முடியரசு அமைப்பை விட மிகவும் கொடுமையானதாகும்.

ஆனாலும் கூட, நிலை இவ்வாறிருக்கிறதே என்பதற்காக, நாம் தேர்தலைப் புறக்கணிக்கக் கூடாது. தேர்தல் என்பது குடியரசமைப்பிற்கு அடித்தளமான ஓர் உறுப்பு. அதில் பிழைகளோ, நெகிழ்ச்சிகளோ இருந்தால், அவற்றை நாம் அதில் ஈடுபட்டுத்தான் சரிப்படுத்த வேண்டும். குடியரசு அமைப்பென்பது அனைவருக்கும் பொதுவானது; அனைவரும் வரவேற்கக் கூடியது. ஆனால், அதில் உள்ள எத்துணையோ ஊழல்கள், கொடுமைகள், முறையற்ற தன்மைகள் போல், தேர்தலும் ஒரு தன்மையாக உள்ளது. அதற்காக அதனைத் திருத்தாமல் அதனைத் தவிர்த்து விடுவதால் அது தானே சீர் பெற்றுவிட வழியில்லை. ஒன்றைத் திருத்துவதானால், அதில் தொடர்பு கொண்டுதான், ஈடுபாடு வைத்துக் கொண்டுதான் திருத்த முடியுமே தவிர, அதினின்று வெளியேறி, நமக்கும் அதற்கும் இருக்கும் ஈடுபாட்டை, அதன் வழி நாம் பெறும் உரிமையைத் தவிர்த்துக்கொண்டு, அதைத் திருத்த முற்பட முடியாது. வீட்டைத்திருத்த விரும்புவன் வீட்டின் உடைமையில் உள்ள உரிமையைத் தன் கையில் வைத்துக் கொண்டுதான், அதைத் திருத்த முடியும். அதைக் கைநெகிழ விட்டு விட்டு எப்படித் திருத்துவது? தந்தை பெரியார் அவர்கள் இந்து மதத்தில் உள்ள ஊழல்களையோ, அல்லது அந்த மதத்தையோ ஒழிக்க விரும்பியவர், அவர் புத்தமதத்தில் சேரவேண்டும் என்று அம்பேத்கர் போன்றவர்கள் அழைப்பு விடுத்தபொழுது, இந்து மதத்தில் தாழும் இருந்து கொண்டேதான் அதை ஒழிக்க முடியும் என்று உணர்ந்த, அந்தத் திருத்தத்தை மேற்கொண்டார். இந்துமதத்தில் தமக்குள்ள உரிமையை அவர் இழக்க விரும்பவில்லை. இதை ஒரு நல்ல எடுத்துக்காட்டாகக் கொள்வதே அறிவுடைமையாகும். ஆகையால், இன்றைய தேர்தலில் நம் ஈடுபாடு நமக்குகந்த தேர்தலை நாம் வளர்த்தெடுக்க இயலும்.

இனி, தேர்தலில் ஈடுபடவேண்டும் என்று முடிவு கட்டியபின் நாம் யாரைத் தேர்ந்தெடுப்பது? எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி? அரசியல் பதவிகளுக்குப் போட்டியிடும் அனைவருமே மக்களைச் சுரண்டி உலைபிலித் துடிக்கும் வஞ்சகர்களே! இங்கொன்றும் அங்கொன்றுமாய் ஏதோ நல்லவர் ஒரு சிலர் இருப்பர்! அவர்களை நாம் எவ்வாறு அடையாளம் காணுவது? எனவே, தீரச்சிந்தித்து நாம் ஒருமுடிவுக்கு வரதாகல் வேண்டும்.

முதலில், இன்னாருக்கு ஒப்போலை இடுங்கள் என்று தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு, அல்லது தம் கருத்தை எதிர்பார்ப்பவர்களுக்குச் சொல்லுவதென்பதே, நல்ல குடியாட்சி மரபாகாது என்று கருதுதல் வேண்டும். மக்களுக்குக் கிடைத்த பொதுநலத் தனிச் சிந்தனை உரிமை என்பது இது ஒன்றுதான்! அவர்களின் பிற சிந்தனையெல்லாம் அவரவர் வாழ்க்கையைப் பற்றிய தந்நலச் சிந்தனைகளே ஆகும்! எனவே, இன்னாருக்கு உங்கள் ஒப்போலையை இடுங்கள் என்பது, அவர்களுக்குக் குடியரசாட்சி கொடுத்த முதலாகிய அடிப்படை உரிமையையே தட்டிப் பறிப்பதாகி விடும் அது பொதுநல உணர்வின் நல்ல மாண்பை வளர்த்தெடுப்பதாகாது. எனவே, அவரவர்கள் அறிவுக்கும், உணர்வுக்கும், உத்திக்கும் பொருந்திய வகையில் அவரவர்களே சிந்தனை செய்து, அவரவர் தொகுதிகளில் நிற்பவர்களைப் பற்றி, மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும், தீர ஆராய்ந்து, நிற்பவர்களின் அறிவுநிலை, பொது ஈடுபாடு, மக்கள்மேல் அவர்கள் கொண்ட அன்பு, மக்களின் நலன் கருதும் பண்பு, உயர் கொள்கை, அதைச் செயல்படுத்தத் துடிக்கும் வேகம், எதையும் நடுநிலைக் கண்ணோட்டத்துடன் தீர்மானித்து, முடிவெடுக்கும் திறமை, துணிவு, ஒருவரைச்சார்ந்து தம் கொள்கையை விற்காத தனித்தன்மை, தம்மை அடிமையாக்கிக் கொள்ளாத உரிமை உணர்வு, தன்னலமறுப்பு, ஈகமனப்பான்மை, செருக்கின்மை, உழைப்புணர்வு, பொருள் நசையின்மை, போக்கில் நேர்மை நயன்மை உணர்வு, பொதுவொழுக்கம், ஊக்கம் - முதலிய குணங்களைக் கண்டறிந்து அவற்றுள் மிகையானவற்றையே மிக்கவாகக் கொண்டு, அவரவர் விருப்பப்படி, தக்கவர் ஒருவர்க்கு ஒப்போலை இடுதலே சிறந்ததாகும். இன்றில்லையாயினும் இப்படிப்பட்ட தேர்வுச் சிந்தனைகள் நாளடைவில வளர்ந்தோங்குவதற்கு இவ்வழி முறைதான் மிகச்சிறந்ததும் சீரியதுமாகும்.

இனி, இவ்வழியாகச் சிந்திக்க இயலாதவர்கள், சிந்திக்க நேரமற்றவர்கள், வாழ்க்கை நெருக்கடிகளிலும், அதன வேகத்திலும், அமைவான சிந்தனைக்கு இடமில்லாதவர்கள், தாம் பின்பற்றும் ஒருவரின் சிந்தனை முடிவையே தம் முடிவாகக் கொள்ளும் நம்பிக்கை உள்ளவர்களுக்கு மட்டும், நம் வேறொரு சுளுவான உளவொன்றினைச் சொல்லுவோம். இந்தப் படியாயும் அவர்கள் கொஞ்சம் சிந்தித்தே செயல்படவேண்டும். இல்லெனில் மாந்தனின் அறிவியக்கத்திற்கே பழுதுபாடு நேர்ந்து விடக்கூடும். எனவே, அத்தகைய முறையில், அத்தகைய நிலையுள்ளவர்கள் கீழே கொடுக்கப்படும் உத்திமுறைகளை நன்கு கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

1. முதலில், எவரையும் கட்சி அடிப்படையில் தேர்வு செய்வது விரும்பத்தக்கதும், அறிவு அடிப்படையானதும் அன்று. கட்சிப்பார்வையும் சாதி, மத அடிப்படைகளைப் போன்றதே ஆகும். இன்றைக்குக் கட்சியும் சாதி, மத-வேலைகளைத்தான் செய்து கொண்டுள்ளது. சிலவிடத்துச் சாதிகளே கட்சிகளாகவும், கட்சிகளே சாதி, மதங்களாகவும் இயங்குகின்றதைக் கண்கூடாகக் காணலாம். எனவே, கட்சி வகையிலோ, சாதிவகையிலோ, மத அடிப்படையிலோ அருள்கனிந்து யாரையும் தேர்ந்தெடுக்க வேண்டாம் என்பதை முதலில் கருத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவரவர் இந்த நிலையில் கட்டாயம் சிந்தித்துச் செயல்படுவதே மிகப் பொருத்தமாக இருக்கும். ஒருவர் சொல்கின்றார் என்பதற்காக, மற்றொருவர் தம் குடும்பத்தைச் சிதைத்துக் கொள்வாரா? கொள்ளமாட்டார்! அதுபோலவே ஒரு நாட்டையும் ஒருவர் சிதைத்துவிட முற்பட்டு விடக்கூடாது. ஒருவர் சிந்தனையை மற்றவர் ஆராய்ந்து தேர்ந்து தெளிவதில் தவறில்லை. ஆராயாமல் அப்படியே பின்பற்றுவதுதான் தவறு. அது தமக்குள்ள அறிவை அழித்துக் கொள்வதாகும்; உணர்வை முடப்படுத்திக் கொள்வதாகும்; நமக்கென்று கொடுக்கப்பட்ட உரிமையை இழந்து கொள்வதாகும்; நமக்குள்ள பொதுக்கடமையைத் தவிர்த்துக் கொள்வதாகும். இந்த உணர்வை நாம் இழந்துபோன பொழுதுதான் நாடு அடிமைப்பட்டது; இனம் அடிமைப்பட்டது; மொழி சீர்குலைந்தது.

2. இனி, இரண்டாவதாக, எந்தத் தொகுதியிலும் இந்தியா ஒன்று என்றும், அதற்காக நாம் உரிமைகளை இழந்து கொண்டாயினும், ஏழ்மைப்பட்டாயினும், அடிமையாக இருந்தாயினும் ஒருமைப்பாட்டினை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் எண்ணுகிற, தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களையும், அத்தகைய உணர்வாளர்களையும் அவர்களைப் பற்றி மேற்கொண்டு எதுவும் சிந்தியாமல் உடனே புறக்கணித்து விடுங்கள்!

3 மூன்றாவதாக, உங்கள் தொகுதியில் நின்றிருப்பவர்கள் தி.மு.க. வைச் சேர்ந்தவரும்; அ.தி.மு.க. வைச் சேர்ந்தவருமே இருந்தால், தி.மு.க. வினர்க்கே ஆதரவளித்து அந்தக்கட்சி வேட்பாளரையே தேர்ந்தெடுங்கள். ஏனெனில், இரண்டு கட்சிகளிலும் பெரும்பாலான நிலைகளில் தி.மு.க.வே நம் நோக்கங்களுக்கு இசைவானது. நமக்கும் நம் கொள்கைகளுக்கும் அதனால் தனிப்பட்ட நலன் ஏதும் விளைந்ததும் விளையப்போவதும் இல்லை என்றாலும், அதனால் நாட்டுக்குக் கொஞ்சமேனும் நல்லது விளையும் என்று உறுதியாகச் சொல்லலாம்.

4. நான்காவதாக, சில தொகுதிகளில் அ.தி.மு.க வும் பிற மாநிலக் கட்சிகளும் நிற்பனவாகத் தெரிகிறது. அவ்விடங்களில் தி.மு.க. வின் கூட்டணியாளர் நிற்கலாம். ஆனால், அவற்றில் ஒன்றிற்குப் போடுவது அவ்வளவு நன்றன்று. தி.மு.க. கூட்டணியில் முசுலீம் லீக்கை நம்பலாம். அவர்கள் நமக்கு மாறுபட்டவரல்லர். எனவே, அத்தகைய இடங்களில், தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த முசுலீம் லீக்கிற்கும், அது நிற்காத நிலையில், அ.தி.மு.க. வுக்குமே

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம் பார்க்க)

இனப்பார்வைக்கு
அப்பாற்பட்டது நயமை !

அஸ்தியே ஆஸ்தியா?
துக்ளக் தீர்ப்புத் தருகிறது!

0 இந்திராகாந்தியின் புகழைப் பாடுவதிலும், அவருடைய அஸ்தியை இந்த நாட்டின் ஆஸ்தியாகக் காட்டுவதிலும், ஆளும் கட்சியின் பிரசாரத்திற்கு ஒரு வாய்ப்பாக இந்தக் கோர சம்பவத்தைப் பயன் படுத்துவதிலும், டெலிவிஷன், ரேடியோ போன்ற சாதனங்களை இதற்காகவே அர்ப்பணிப்பதிலும், ஒரு துர்மரணத்தை ஓர் அரசியல் மேடையாக மாற்றுவதிலும் அரசுக்கு இருக்கும் அக்கறை-இந்த நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதில் இருப்பதாகத் தெரியவில்லை!

— 'துக்ளக்' இதழ்-15.11.84. பக்.5.

ஒப்போலை உரிமையை இழக்காதீர்கள்!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-2 இதழ் எண் : 49 (9-12-84) பகுதி-49-50

நம் நெடுநாளைய கனவான தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி, அமைந்தது!

இப்பொழுதுள்ள இந்திய அரசியல், மற்றும் பொருளியல் குமுகாயச் சூழலில், தமிழ்நாடு தன்னிறைவு பெற முடியாதென்றும், முன்னேற்றம் அடைய முடியாதென்றும், கருதி, தமிழகத்தில் உள்ள பாராளுமன்ற அரசியல் சார்பற்ற முறையிலும், மக்கள் நலன் காதியும் இயங்கிவரும் ஐந்து இயக்கங்கள் ஒன்றிணைந்து, தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி என்னும் ஓர் அமைப்பை அண்மையில் உருவாக்கியுள்ளன.

அவ்வியக்கங்களாவன : 1. உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், 2. பெரியார் சம உரிமைக் கழகம் 3. அறிவியக்கப் பேரவை, 4. தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மார்க்கிய இலெனியம்), 5 தமிழக மாநிலக் குழு, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா.இலெ. நடுவண் சீரமைப்புக் குழு).

இந்த வலிவான அமைப்பு ஏற்பட்டதன் வழி. தந்தை பெரியார் அவர்களின் வலிந்த, தலையாய கொள்கையும், நம் நீண்டநாளைய கனவும் நிறைவேறுகின்றன. இக் கூட்டணியின் ஒரே கொள்கையாகத் தமிழகத்தின விடுதலை உறுதி செய்யப் பெற்று, அது வெளியிட்டுள்ள இயக்க அறிவிப்பு அறிக்கையில் அதன் கொள்கை கீழ்வருமாறு வரையறுக்கப் பட்டுள்ளது.

‘அனைத்து வல்லரசுகளின் கொள்ளைகளைக் குழிதோண்டிப் புதைக்கவும், அரசு - தரகு முதலாளியத்தின மற்றும் அதிகார வகுப்பின் கொட்டங்களை ஒழிக்கவும், சாதிய - நிலக்கிழமை அடிமைத் தனத்திற்கு முடிவு கட்டவும், உண்மையான மக்கள் குடியாட்சியை அமைத்திடவும், தமிழக மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது இக் கூட்டணி.

‘அவ்வகையில் இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களின் புரட்சி வழி விடுதலைக்குச் செயல் வடிவமும் ஆதரவும் இக் கூட்டணி நல்கிடும். மற்றும் உலகில் போராடும் அனைத்து மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கும் ‘தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி’ பக்கத் துணையாக நிற்கும்’

கூட்டணி வெளியிட்டுள்ள விரிவான நான்கு பக்கமுள்ள இயக்க அமைப்பின் அறிவிப்பு அறிக்கையில், இவ்வியக்கம் எதற்காகத் தோற்றுவிக்கப் பெற்றது என்பதற்குப் பலவாறான மிக விளக்கமான காரணங்கள் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன.

இப்பொழுதைய நிலையில் இந்தியா ஒரு சிறைக் கூடமாக உள்ளதென்றும், தமிழகத்தின் சிற்றூர்ப் புறங்கள் வல்லரசுகளின், பெரும் நிலக்கிழார்களின் வேட்டைக்காடாக எவ்வாறு ஆக்கப் பட்டுள்ளனவென்றும், தமிழக மக்களின் வேலை வாய்ப்பைப் பெருக்கவும்,முறையான வேளாண்மையை வளர்க்கவும், குடியிருப்பு, உடை, உடல்நலம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு அடையவும், இங்குள்ள வளங்கள் அனைத்தையும் பெருக்கிடும் வகையிலும், தொழில் திட்டங்கள் அமையாமல், எவ்வாறு அவை வல்லரசு மற்றும் முதலாளிய நாடுகளுக்கும், இந்தியப் பெரும் தரகு முதலாளியக் கும்பலுக்கும், அதிகார வகுப்பிற்கும்,பெரும் நிலவுடைமையாளர்களுக்கும் கொள்ளையடிப்பதற்கே வழி வகையாக உள்ளன என்றும், இக்கால் இந்தியா கடைப்பிடிக்கும் வாணிகக் கொள்கை, எப்படி இந்நாட்டை வல்லரசுகளிடம் அடகு வைத்துள்ளது என்றும், இங்குள்ள கெடுக்கும் கல்வி முறை,எப்படி, இங்குள்ள ஏழை மக்களிடம் தாழ்வுணர்ச்சியையும், இயலாமையையும், அடிமைத்தனத்தையும் வளர்த்து வருவதுடன்:, நாட்டு மேட்டுக்குடியினரிடையே ஒட்டுண்ணித்தனத்தையும் நலனற்ற தந்நலத்தையும், கோழைத்தனத்தையும் வளர்ப்பதற்கே அமைக்கப்பட்டிருக்கின்றது என்றும், மற்றும், இங்குள்ள மொழியடிமைத்தனம், சாதிக் கொடுமை, சீரழிந்து வரும் மக்கள் நலம், பண்பாட்டுச் சீரழிவுகள் - முதலியவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி அவை எப்படித்தீர்க்கப்படவேண்டும் என்றும், அறிக்கை விரிவாகவும் விளக்கமாகவும் விளத்தப் படுத்துகிறது.

இன்றுள்ள தமிழக அரசு, எத்துறையிலும், தற்சார்பற்ற தில்லியிலுள்ள நடுவண் அரசிற்கும் அதன்வழி பலவேறு வல்லரசு நாடுகளுக்கும், தலை குனிந்து, எடுபிடி அரசாகவே செயல்பட்டு வருவதையும்; இங்குள்ள அரசியல் கட்சிகளும், தங்களுக்கென்று தாங்கள் தொடக்கத்தில் அறிவித்த கொள்கைகளையும் கோட்பாடுகளையும் செயல்முறைகளையும், அவற்றுக்கான நயமையான மக்கள் போராட்டங்களையும் வழிநடத்த முடியாமல் மறந்தும், துறந்தும் பெருநலந் துய்க்கின்ற வாழ்க்கையிலேயே மிதந்து, இலக்கக் கணக்கில் செலவு செய்து, கோடிக் கணக்கில் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு,இந்திய ஆளும் கும்பலுக்கு ஏவலாட்களாக. நேரத்திற்கு ஒரு கட்சி நிலைப்பாட்டிற்கு ஒரு கொள்கை என்று பச்சோந்தித் தனமாகச் செயல்பட்டு வருவதையும் இவ்வறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இறுதியில், முற்றமுடிந்த முடிபாக, மேற்குறிப்பிட்ட இழிநிலைகளையெல்லாம் ஒழித்துத் தமிழக மக்களுக்கு உண்மையான - வளமான வாழ்வை உறதிப்படுத்திட வேண்டுமெனில், அனைத்து வல்லரசு நாடுகளின் வல்லாளுமைகளை எதிர்ப்பதும், பன்னாட்டு மூலமுதலீடுகளையும், இந்தியப் பெருமுதலாளிகளின மற்றும் தமிழகத் தரகு முதலாளிகளின் மூலமுதலீடுகளையும் பறிமுதல் செய்து, உழைக்கும் மக்களின் உடைமையாக்குதல் வேண்டும் என்பதையும்; பெரும் நிலக்கிழார்களின், கோயில் மடங்களின் நிலங்கள், உடைமைகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்து, கடைநிலைக் குத்தகைக் காரர்களுக்கும், கூலி உழவர்களுக்கும் உடைமையாக்கிடல் வேண்டும் என்பதையும்; மக்களுக்கு நன்மை பயக்கும் உண்மையான மக்கள் சமநிலைக் குடியாட்சியை அமைத்துத் தருவதன் மூலம் மட்டுமே இவை அனைத்தையும் செய்திட இயலும் என்பதையும், இன்றைய அரசியல் சிறைக் கூடத்தில் அல்லலுற்றுக் கிடக்கும் நிலையில், மக்களுக்கு நன்மை பயக்கும் இந்த அடிப்படையான பணிகளை மேற்கொள்ள முடியாது என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டி, இச்சிக்கல்களையெல்லாம் தீர்ப்பதற்குத் தமிழக மக்கள் விடுதலை என்பதே ஒரு கட்டாயக் கடமையாக இருக்கிறது என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது

எனவே, இக் கூட்டணி எடுத்துக் கொண்ட மிக மிகக் கடுமையானதும் மிகவும் சுமைபானதுமாகிய இக் குறிக்கோள்களுக்குச் செயல் வடிவம் நல்கிடத் தமிழகத்து இளைஞர்களையும், தொழிலாளர்களையும், உழவர்களையும், பிற அனைத்துத் தரப்பு மக்களையும், தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி அறைகூவி அழைக்கிறது! வாழ்க கூட்டணி! வளர்க புரட்சி! வெல்க மக்களியக்கம்! விடுதலை பெறுக தனித்தமிழ் நாடு!

-பெருஞ்சித்திரனார்.

(2-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒப்போலை அளிப்பது சிறந்த முடிபாகும் என்று தெரிந்து கொள்வது நல்லது.

5 இனி, சிற்சில விடங்களில், புதிதாகத் தொடங்கபபெற்ற எசு.டி. சோமசுந்தரத்தின் (நமது கழகம்) கட்சியைச் சார்ந்தவர்களும் நிற்கிறார்கள். அவ் விடங்களில் தி.மு.கவும் அ.தி.மு.கவும் ஒரு முமுனைப் போட்டியையாகிலும். வேறு பலரும் சேர்ந்து பலமுனைப் போட்டியையாகிலும் உருவாக்கியிருக்கலாம். அவ் விடங்களில், அ.தி.மு.க.வினரையும் பிறரையும் தவிர்த்து, தி.மு.க.வையும், நமது கழகத்தையும் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு, இரு கட்சி வேட்பாளர்களில்,எவர் மிக நேர்மையும்,நாணயமும், ஆழ்ந்த பொதுவுணர்வும் உள்ளவர் என்றுதேர்ந்து, அவருக்கே ஆதரவு தரலாம்.

ஏனெனில், கட்சி சார்ந்த தேர்வை விட, சில விடங்களில் ஆளைச் சார்ந்த தேர்வே தேவையாக இருக்கும். ஒவ்வொருவரையும் நாம் இங்கிருந்து அறிவதைவிட, ஆங்காங்குள்ள தொகுதி மக்களே நன்கு உணர்வார்களாகையால், அவ்விடங்களில் ஆளைப் பொறுத்தே நம் தேர்வு இருத்தல் வேண்டுவது இன்றியமையாததன்றோ?

6. இனி, பலமுனைப் போட்டிகள் நிற்கும் இடங்களில், தனி வேட்பாளர்கள் சிலர் மிகச் சிறந்த நேர்மையாளராகவும் பொதுவாகத் தமிழ்மொழி, இன, நாட்டு நலன்களில் அக்கறையுடையவர்களாகவும் இருக்கலாம். அத்தகைய இடங்களில் மட்டும் தனியார்களைத் தேர்வது சிறந்ததாகப் படலாம். எனவே இன்றியமையாத அவ் விரண்டோரிடங்களில் மட்டும் தனியார்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

7. இனி, நாட்டிலுள்ள பொதுவுடைமையாளர்கள் பலர் தி.மு.க.கூட்டணியைச் சாராமலும் சார்ந்தும் நிற்குமிடங்களில், அவர்கள் தகுதியுடையவராக இருப்பின் அவர்களையும், இல்லெனில் திராவிட இயக்கங்களைச் சேர்ந்த உணர்வுள்ளவர்களில் தகுதியுடையவரையும் எடையிட்டுப் பார்த்து அவர்களுள் ஒருவரைத் தேரலாம்.

8. இனி, இறுதியாகத் தந்தை பெரியார் அவர்களின் கொள்கைப்படி, பார்ப்பனர்கள் எவரேனும், அவர் எந்த இயக்கத்தைச் சார்ந்து நிற்பினும், தனியாக நிற்பினும் அவரைத் தவிர்த்துப் பிறரில் தகுதியானவர்க்கே உங்கள் ஒப்போலைகளையிடலாம்.

மொத்தத்தில், ஆர்.எசு.எசு., இந்து பரிசுத் முதலிய பார்ப்பன இயக்கங்கள் ஆதரிக்கும் எவரானாலும் அவரைத் தவிர்த்து விடுவது நல்லது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேற்காட்டிய உளவு முறைகளை போதும் என்று கருதுகின்றோம். ஆனால், மீண்டும் சொல்கின்றோம்; அன்பர்கள் தங்கள் தங்கள் கருத்துகளுக்கே முதலிடம் தரவேண்டும் என்பதுவே நம் கொள்கை. அத்தகையதொரு பழக்கவுணர்வே உண்மையான குடியரசு அமைப்புக்கு அடிப்படையாக இருத்தல் முடியும். அந்த உணர்வையே வளர்த்தெடுக்க வேண்டும். நாம் இங்குக் கூறிவிட்டோம் என்பதற்காகவே, அவரவர்களின் மனச் சான்றைக் கொன்று கொள்ள வேண்டும் என்பதை நாம் எந்தவகையிலும் வரவேற்கவில்லை. சாதி மத வேறுபாடுகளையும் அவை சார்ந்த அரசியலையும் எவ்வாறு நாம் விரும்பவில்லையோ, அவ்வாறே கட்சி அரசியலும் கூடாது என்பதே நம் கொள்கை. ஆனாலும், குடியரசில் வழிகாட்டுதல் என்பது, மக்கள் அனைவரும் நல்ல தரமான திறமான, நடுநிலையான அரசியல் உணர்வும் அறிவும் பெறும் வரையில், செயல்படுவதில் தவறில்லை என்பதை நாம் உணர்ந்திருக்கின்றோம். அதனடிப்படையில்தான் இங்குக் கருத்துகள் கூறப்பெற்றுள்ளன.

எவ்வாறேனும், நல்ல வலிவான, பொலிவான ஒரு சமனிலைக் குடியரசை மீட்டெடுக்க வேண்டுவதே நம் அனைவருடைய கடமையாகும். நாளை, தனித் தமிழக மலர்ச்சிக்கும் அதுவே அடிப்படையாக அமைய முடியும். ஆனால், எவ்வாற்றானும், நல்லதோர் அரசியல் அமைப்பும், குடியாட்சித் தன்மையும் ஏற்படும் வரை, நாம் இப்பொழுதுள்ள அரசியலையோ, அதன் அடித்தளமான தேர்தல் முறையையோ புறக்க வேண்டுவதில்லை. அவற்றின் வழியாகத்தான் நாம் நடந்துசென்று நாம் விரும்பும் கொள்கை இலக்கை எட்டுவது இயலும். அமைந்துள்ள மண்சாலையில் நடந்துதான் இதனினும் மேலான கல்சாலையையோ, கரிநெய்ச் சாலையையோ, கற்காரைச் சாலையையோ நாம் எதிர்காலத்தில் அமைத்தாகல் வேண்டும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது என்பதே நம அழுத்தமான கருத்தாகும்.

ஓர் அறிவிப்பு

இந்திராவின் சாம்பல் தொடர்பாக பாவலரேறுவின் முறையீட்டு வழக்கும் நடுவரின் தீர்ப்புரையும் அடுத்த இதழில் இடம்பெறும்.

- அமைச்சர்

விடுதலை பெறுவது, அது முதல் வேலை!

தொடர்-2

மக்கள் பகை அரசை நீடிக்க விடலாமா?

அரசு தனிப்பெரும் சாதி மத இனவெறி நிறுவனம் :

அரசு சாதிய முறையை ஒழிப்பதற்கு மாறாக, ஒவ்வொருவரும் பதிவுசெய்து, முத்திரை குத்தி ஏற்கும் படி மக்களைக் கட்டாயப்படுத்துகிறது.

அரசு மதச் சார்பற்றதாகக் கூறிக்கொண்டாலும், மதங்களை ஆதரித்து மத நிகழ்ச்சிகளை நடத்தி, மதச் சடங்கு முறையில் இயங்குகிறது. அரசு நிறுவனங்கள் 'சரசுவதி கருவிப் பூசை' நடத்துகின்றன. திறப்பு விழாக்களும், பிற திறப்பு விழாக்களும் குத்துவிளக்கேற்றித் தொடங்கப் படுகின்றன. கல்லணை திறக்கவும், மாவட்ட ஆட்சியாளர் கடவுளுக்குப் பூசை போடுகிறார்.

அரசு சிறிய தேசிய இனங்களை ஒடுக்கியும், பெரும் தேசிய இனவெறியைத் தூண்டியும் மொழியைத் திணித்தும் இனவெறிக்குத் தூபம் போட்டு தூமத்தூள் வீசுகிறது.

சாதி மத, இனவெறிப் படுகொலைக் குற்றவாளிகளை எந்த வழக்கிலும் தண்டிக்காது அடைக்கலமளிக்கிறது.

கல்வி நிறுவனங்களையும், அறக்கட்டளைகளையும் சாதி, மத, இன வகையில் நடத்துவதற்கு ஒப்புதல் அளிக்கிறது. அவற்றுக்குச் சிறப்பு உரிமைகளும் சலுகைகளும்கூட வழங்குகிறது.

சாதி, மத இனத் தலைவர்களுக்கு விழா எடுக்கிறது; சிலை வைக்கிறது. போக்குவரத்துக் கழகங்கள், சாலைகள், மாவட்டங்கள் போன்றவற்றுக்கு அவர்களின் பெயர்களைச் சூட்டுகிறது.

அரசின் முகாமையான உறுப்பான படையும், சாதி, மத, இன வகையில் பிரிக்கப்பட்டு இயங்குகிறது.

அரசு அதிகாரிகள், வாரியத் தலைவர்கள், அமைச்சர்கள் கூட, சாதி, மத, இன வகையில் அமர்த்தப்படுகிறார்கள்.

இத்தனையும் செய்துவிட்டுச் சாதி, மத, இன ஒற்றுமையைக் கடைப்பிடிக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்துகிறது.

அரசு தனிப்பெரும் ஒடுக்குமுறை நிறுவனம் :

மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் எந்தப் பகுதியையும் கலவரப் பகுதியாக அறிவித்துக் கண்டதும் சுடுகிறது அரசு.

சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக முகாமிடும் இடங்களில் எல்லாம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வெறியாட்டமாடுகின்றது அரசின் படைத்துறை!

சிறை, காவல் நிலையக் கற்பழிப்புகள், கொலைகள் பெருகி வருவதோடு, காவல் துறையினரே கொள்ளையடிக்கும் நிகழ்ச்சிகள் அதிகரித்து வருகின்றன.

அரசே கொலை, கொள்ளை, கற்பழிப்பு நடத்திவிட்டு, அவற்றை மறைக்கச் சட்ட மீறல்கள் செய்வதாகப் பலமுறை மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

அடக்குமுறைக் கருவிகளை வைத்துக்கொள்ளும் முற்றுரிமையைப் பெற்றது அரசே!

அரசினால் தவறாகத் தண்டிக்கப் பட்டவர்கள், ஊறுபாட்டுக்கு உள்ளானவர்கள் இழப்பீடு பெற முடிவதில்லை.

எழுத்துரிமை, பேச்சுரிமை, ஒன்றியம் வைத்துக் கொள்ளும் உரிமை, இன்னும் அடிப்படை உரிமைகள் ஏட்டளவில் இருப்பதையும் அரசு பிடுங்கிக் கொள்கிறது.

யாரையும் உசாவல் இன்றிச் சிறைப்படுத்துகிறது; எந்த இயக்கத்தையும் தடைசெய்கிறது; எந்த இடத்தையும், உடைமையையும் பறித்துக் கொள்கிறது.

எந்த வழக்கிலும் மக்களுக்குத் துணையாக இருந்ததில்லை; முதலாளிகள், நிலக்கிழார்களுக்கே அரசு துணையாக நிற்கிறது.

அரசு நிறுவனத்தினரிடம் எளிய பொது மக்கள் பேசத் தொடங்கினால் 'என்னிடமே சட்டம் பேசுகிறாயா?' 'என்னையே எதிர்த்துப் பேசுகிறாயா?' என்று கேட்டு ஊறு விளைவிக்கின்றனர்.

அரசு, தனது நிறுவன ஊழியர்களுக்கே மக்கள் நாயக, குடியுரிமைகளை மறுக்கிறது. ஆண்டுகள் பல ஆகியும், ஆறு இலக்கம் அஞ்சல் - தொலைவரி ஊழியர்கள், ஆலை ஊழியர்கள், நிலைப்படுத்தமின்றிச் சட்டப் புறம்பாக நசுக்கப்படுகின்றனர்; ஒன்றியம் வைத்துக் கொள்ளவும் மறுக்கப்படுகின்றனர்.

இவ்வாறு, எந்த வகையில் பார்த்தாலும், மக்கள் பகை, மக்கள்நாயகப் பகை, தேசப்பகை நிறுவனம் தான் 'அரசு' என்பது!

x "அதிகாரவகுப்பு' — என்பது நாட்டில் செயலாட்சிப் பொறுப்பிலுள்ள மேதைகளே;

x "காவல் துறை" — என்பது நாட்டின் சட்ட ஒழுங்கு அமைதியின் காவலன்;

x "படைத்துறை" — என்பது தேசத்தின் எல்லைகளைக் காக்கும் தாயதுறை;

x "வழக்கு மன்றம்" — அழிம்புகளை வீழ்த்தும் அறத்தின் நிலைக் களன்;

x "சிறைச்சாலை" — குற்றவாளிகளைத் திருத்தி, நல்ல குடிமகனுக்கும் பட்டறை.

— இப்படி நம்பவைக்க எத்தனையோ முயற்சிகள் நடக்கின்றன. இந்த அரசுப்பற்றைத்தான் பிறப்பிலிருந்து மறைவரை, இந்தியக் குடிமகனின் மண்டையில் ஏற்றுகிறார்கள்.

"இரண்டு தனியாட்களுக்கிடையில், இரண்டு குடும்பங்கட்கிடையில், இரண்டு கூட்டங்கட்கிடையில், இரண்டு வகுப்புகட்கிடையில் தனி முறையிலோ, சாதி, மத, இன, வகுப்பு முறையிலோ ஏற்படும் எல்லாப் பூசல்களையும் தீர்த்து வைப்பது அரசு; அவர் கட்கிடையில் இணக்கம் ஏற்படுத்துவது அரசு;

குடிநீர், நலத்துறை, பாதை கல்வி, முதலான பொதுப் பணிகளை அனைத்து மக்களின் நலம்கருதி, ஆற்றுவது அரசு;

உள்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, அமைதியை நிலவச் செய்வது அரசு;

அயலகப் படை எழுப்புக்கு எதிராகத் தேசத்தைக் காப்பது அரசு!

ஆகவே வரி போடுவதிலிருந்து, தனக்குக் கட்டுப்படாத எவர் ஒருவரையும் சுட்டுக்கொல்வதுவரை அனைத்து அதிகாரமும் அதற்கு இருப்பது முற்றும் நேர்மையானதே! இவை அரசுக்குள்ள புனித உரிமைகள்! அரசை இயக்கும் ம.கோ. இராவோ, இந்திராவோ தவறு செய்யலாம்; அவர்களைக் கண்டிக்கலாம்; திறனாய்வு செய்யலாம்; எதிர்க்கலாம்! ஆனால் அரசை எதிர்ப்பதோ, திறனாய்வு செய்வதோ அனுமதிக்க இயலாதவை! அது தேசப் பகைமை! சட்டப் புறம்பானது"

. . . இவை கல்வி நிறுவனங்களில் நாளும் கற்றுத் தரப்படும் பாடங்கள்!

. . . இவையே ஆளும் வகுப்பின் கொள்கைப்பரப்பு வெடிக்குழல்கள் முழங்கும் வெடி முழக்கங்கள்!

. . . இவையே தேர்தல் அரசியல் கட்சிகளின் மேடைப் பொழிவுகள்!

நடைமுறையில் இவை உண்மையா?

இல்லை! அரசு என்பது அதிகாரத் திமிர்பிடித்த கொலை, கொள்ளைக் கூட்டம் என்றே மக்களின் அன்றாடப் பட்டறிவுகள் காட்டுகின்றன!

ஆனால்,

"இவ்வளவுபெரிய அரசமைப்பில், அங்கோ இங்கோ சில தவறுகள் நடக்கலாம்; அவற்றைச் சரி செய்து விடலாம்" என்று முதலாளியச் சீர்திருத்தவாணர்கள் மக்களுக்கு நம்பிக்கையூட்ட முயல்கின்றனர்.

போலிப் பொதுமையரோ, "தாங்கள் தேர்தலில் வெற்றிபெற்று, ஆளும் கட்சியாகி அரசமைத்தால் போதும்; அரசு நல்ல பிள்ளையாகிவிடும். முதலாளிக்கும் தொழிலாளிக்கும், நிலக்கிழாருக்கும், உழவருக்கும் நடக்கும் பூசல்களில்கூட, முதலாளியக் கட்சிகள் ஆட்சிசெய்வதால்தான் படையும் காவலும் பிழை புரிகிறது; எமது வரவால் பிழை அகலும்" என்று பொய்பேசி ஏமாற்றுகிறார்கள்.

இவ்வளவு கடைகெட்ட அரசை இவர்கள் நேர்மையானதாக்குவதும், இதன் நீடிப்பை ஆதரிப்பதும் ஏன்?

மறைமுகமாக இவர்கள் ஆளும் வகுப்பாகிய நிலக்கிழார், தரகுமுதலாளிகள், பிற அதிகாரக் கும்பல்கள் ஆகியோர்க்குத் தொண்டூழியம் செய்கின்றனர். அரசு என்பது இவர்களின் நலன்களையே காக்கின்றது. எனவே, இவர்கள் இந்த அரசை ஆதரிக்கிறார்கள்! இதன் நீடிப்பை விரும்புகிறார்கள்!

இந்த மக்கட்பகை அரசை, இதன் உறுப்புகளாகிய படை, காவல், வழக்குமன்றம், சிறைச்சாலை ஆகிய அனைத்துடனும் தூக்கி எறிவதுதான் உண்மையில் புரட்சியாகும்!

இதைத்தான் மெய்யான பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் பறைசாற்றுகின்றனர்! x

நன்றி : "புரட்சிப்புயல்" மார்ச்சு, ஏப்பிரல் 1984

காலம் வாய்க்குமா? கணியம் பாருங்கள்!

27.9.84 ஆம் நாளிட்ட 'தினமணி' நாளிதழ் பக்கம் 7-ஐத் திருப்புங்கள் :

இந்தியாவின் அனைத்து நாட்டு - 'உடன் படிக்கைகள் பற்றிய செய்தியைக் கவனியுங்கள்!

'நடுவண் ஆட்சி மொழி செயல் திட்டக்குழு' 24.9.84-இல் புது தில்லியில் கூடியது : அப்போது எடுக்கப்பட்ட முடிவுகளை ஆழ்ந்து நோக்குங்கள் :

1. 'இந்தியாவில் ஆங்கில உடன்பாடுகளுடன் இந்தி மொழியிலான உடன்பாடுகளும் கையெழுத்திடப்படும்-

2. வெளிநாடுகளில் ஆங்கிலத்தோடு, 'இந்திப் படிகளும்' அணியமாக்கப்படும் -

3. நடுவண் அரசின் அனைத்து ஆணைகளும் இந்தியிலும் ஆங்கிலத்திலும் இருக்க வேண்டும். இந்தியில் வரும் மடல்களுக்கு இந்தியிலேயே விடை அனுப்பப்பட வேண்டும்.

4. இதற்காக அமைச்சகங்களும், அரசு அலுவலகங்களும் குறிப்பிட்ட விழுக்காடு 'தேவநாகரி லிபி' தட்டச்சுப் பொறிகள் வாங்குவதைக் கட்டாயமாக்கியுள்ளது.

'மீண்டும் 1965 - ஐ இங்கு நிகழ்த்திக்காட்டுவோம்' என்றும், 'எந்த வடிவிலும் இந்தி நுழைவதை ஏற்கமாட்டோம்' என்றும், 'இந்தி திணிக்கப்படாதென்று நம்புகிறோம்' என்றும் புரட்சியாய் முழக்கியும், போர்க்குரல் கொடுத்தும், சப்பைக்கட்டுக் கட்டியும் எண்ணற்ற எழுதமிழ் மறவர்களைப் 'போத்தி' மூளையைச் சலவை செய்து வைத்துள்ள 'திராவிடத் தலைமை'களே!

இதற்கும்-இனியும் 'காலம் வாய்க்கும்' என்று 'கணியம்' சொல்லத்தான் போகின்றீர்களா?

— தமிழ்வென்றி

சொல்லாய்வறிஞர் ப. அருளி அவர்களின்
தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புத்தாக்க நூல்!
இவை தமிழல்ல
(அயற்சொல் அகராதி)
விலை: 10-00; அஞ்சல் செலவு: 1-00;
பதிவஞ்சல் செலவு: 5-00
அறிவன் பதிப்பகம்: 2/5 காளிகோயில்தெரு,
தமிழூர்-புதுச்சேரி-9.

காய்ப்பதிங் கொருபால் கனிவதிங் கொருபால்

தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி

இந்தியா ஒரு சிறைக்கூடமே !

பல்வேறு மொழிகளும் பண்பாடுகளும் உடைய இந்தியத் துணைக் கண்டத்து மக்களைத் தொடர்ந்து கொள்ளையடித்திடவே ஆங்கிலேய வல்லரசு 'ஓர் இந்தியா' என்னும் அரசியல் அமைப்பை ஏற்படுத்தியது. 1947இல் டாட்டா, பிர்லா போன்ற இந்தியப் பெருமுதலாளிகளும் வெள்ளையர்களோடு கூட்டுக் கொள்ளை அடித்திட மறைமுகமான உடன்பாட்டைச் செய்து கொண்டனர். இந்த உடன்பாட்டின் வெளிப்பாடே இன்று நாம் காணும் 'சுதந்திரம்'.

கடந்த 37 ஆண்டுகால புனித 'பாரத ஆட்சியில்' அமெரிக்கா, உருசியா போன்ற வல்லரசு நாடுகளும், ஜெர்மனி, பிரான்சு, ஜப்பான் போன்ற தொழில் வளங்கொண்ட முதலாளிய நாடுகளும் இந்தியப் பெரும் தரகு முதலாளிகளுடன் கூட்டுச்சேர்ந்து கொள்ளையடிப்பது மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. பெரும் நிலவுடைமையாளர்களும் பண்ணைக் கூலிகளை இன்னும் கொத்தடிமைகளாக வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக, பெரும்பான்மையான ஏழை மக்கள் மேலும் மேலும் வறுமையில் வாடுகிறார்கள். இந்த உண்மையைக் குறிப்பாக உணர்ந்த காரணத்தினால்தான் தந்தை பெரியாரும் பின்பு அம்பேத்காரும் இந்தச் சுரண்டல் அமைப்பைக் கட்டிக் காத்திடும் அரசியல் சட்டத்தைத் தீயிட்டுக் கொளுத்த முன் வந்தார்கள். தந்தை பெரியார் இந்திய அரசியல் கட்டமைப்பிலிருந்து தமிழகத்தின் விடுதலையைக் கோரினார்.

இந்நிலைகளை எதிர்த்துப் போராடும் எந்தரத்து மக்களையும் ஈவிரக்கமின்றி மிகக் கொடுமையான முறையில் இந்திய நடுவணரசும், அதன் இராணுவமும், காவல் துறையும், ஆட்சித் துறையும், நீதிமன்றமும் அடக்கி ஒடுக்கி ஆட்சிசெய்து வருகின்றன. நடுவண் அரசின் கீழுள்ள மாநில அரசுகளும் எந்தவிதமான அதிகாரமுமின்றி இதற்குத் துணைபோகின்ற நிலையில்தாம் வைக்கப்பட்டு இருக்கின்றன. இந்திய நடுவண் அரசின் ஆட்சி அதிகாரத்திற்கு மாறாகச் செயல்படும் மாநில அரசுகளின் ஆட்சி கவிழ்க்கப்படுகின்றது. இராணுவத்தையும், எல்லைப் பாதுகாப்புப் படையையும் 'சட்டம் - ஒழுங்கு, என்கின்ற பெயரில் முடுக்கிவிட்டு ஆயிரக் கணக்கான மக்களைக் கொலைசெய்து வருவதைத்தான் இன்று நாம் கண்கூடாகப் பார்க்கிறோம்.

நூறாண்டு வெள்ளையராட்சிக் காலத்தில் நடந்த கொலைகளைவிடப் பன்மடங்கு அதிகமான கொலைகள் இந்த 37 ஆண்டுக்கால நடுவண் ஆட்சியில் நடந்துவந்துள்ளன. இதுதான் நாகர் நாட்டிலும், மிசோ நாட்டிலும், அசாம் நாட்டிலும், தமிழகத்திலும், நேற்று ஆந்திர நாட்டிலும், பஞ்சாப் நாட்டிலும் நடந்துள்ள வரலாற்று உண்மை. இத்தகையதோர் இந்தியாவைப் பல்வேறு நாட்டினங்களின் சிறைக்கூடமென்று அழைக்காமல் வேறு எங்ஙனம் அழைத்திடமுடியும்.

இவ்விந்தியச் சிறைக்கூடத்திலுள்ள தமிழகத்து ஐந்து கோடி மக்களின் இன்றைய நிலையென்ன? பெரும்பான்மையான உழவர்கள் ஒட்டாண்டிகளாகி வருகின்றனர். தொழிலாளர்கள் வேலையிழந்து வருகின்றனர். ஒவ்வொரு குடிமகனும் தாங்கமுடியாத சுமையில் தவித்திடும் நிலையில் உள்ளான். வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி உயர்வும் மலைபோல் உயர்ந்துள்ளன. எங்கும் வறட்சி—எதிலும் பற்றாக்குறை.

தமிழகத்தின் கிராமப்புறங்கள் வல்லரசுகளின், பெரும் நிலக்கிழார்களின் வேட்டைகாடே !

'உற்பத்தியின்பெருக்கம்'—'உழவர்களுக்குப் பெருத்த இலாபம்' என்று பல ஆசை வார்த்தைகளைக் காட்டிப் பசுமைப் புரட்சி திட்டத்தை இந்திய அரசு மிகத் தீவிரமாகத் திணித்து வருகிறது. இங்கு உண்மையில் அதன் வெளிப்பாடு என்ன? அமெரிக்க வல்லரசு தொடர்ந்து கொள்ளையடித்திடவே, மூன்றும் உலக நாடுகளான வேளாண்மை நாடுகளைத் தன் நாட்டுத் தொழிலுக்கு நிலையான அடிமைகளாக ஆக்கிடவே, 1960இல் இப்பசுமைப் புரட்சித் திட்டத்தை உருவாக்கிற்று. இப் புதிய வேளாண்மைத் திட்டத்தின் அடிப்படையே விந்தை வித்துக்களான வீரிய வித்துகளாகும். (உண்மையில் இவை சோதா வித்துகளே). இந்த வீரிய விதைகள் அதிக அளவு செயற்கை உரங்களை உட்செரித்துக்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டவை. இவ்வித்துகள் நீர்வளம் இல்லாமல், பல்வகையான பூச்சிக் கொல்லிகளும், செயற்கை உரங்களும் இல்லாமல் விளைச்சல் தருவன அல்ல. மேலும் தொடர்ந்து ஒரே வேலையைச் செய்யும் இம்முறையானது நிலவளத்தை வேகமாக அழிப்பது மட்டுமல்லாமல், உழுபவனுக்கு உதவும் (மண் புழு, தேன் பூச்சி போன்ற) பூச்சிகளையும், எருக்களையும் கொல்வதோடு, வாழ்வின் சூழலையும் நச்சுத் தன்மை ஆக்கிவருகிறது. இவ்வேளாண்மை முறையில் விளையும் பொருள்கள் அனைத்துமே சத்துணவாக இருப்பது இல்லை. இதனால் ஏற்படும் வயிற்றுவலித் தொல்லையால் அவதியுறும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த முறையின் காரணமாக (சாணி, உரம் தேவையற்றதாக-நிலை உருவாகியதால்) கால்நடைகள் மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. பணப்பயிர்கள் அதிகரிப்பு மேலும் கால்நடைகளின் தீவனத்தைக்

மூலம் பல்வேறு வல்லரசு நாடுகளுக்கும் தலை குனிந்து எடுபிடி அரசாகத்தான் செயல்படுகிறது. இன்று நடுவணரசு காலால் இட்ட பணியை தலையில் ஏற்றுச் செய்பவர்களாகத்தாம் தமிழகத்தில் ஆட்சியாளர்கள அரசு அதிகாரிகள் செயல்படுகிறார்கள்.

தமிழகத்தில் இயங்குகின்ற அரசியல் கட்சிகளின் பச்சோந்தித்தனம்

தேர்தலில் பங்குகொள்ளும் அனைத்துக் கட்சிகளின் தலைமைகளும் மக்களை மறந்து, மக்களின் நியாயமான போராட்டங்களை வழிநடத்தமுன் வராமல், சுகபோக வாழ்வில் மிதந்து வருகின்றனர். இலக்கக்கணக்கில் செலவுசெய்து, கோடிக்கணக்கில் பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாககொண்டு இந்திய ஆளும் கும்பலுக்கு ஏவலாட்களாகச் செயல்பட்டு வருகின்றனர். நேரத்திற்கு ஒரு கட்சி நிமிடத்திற்கு ஒரு கொள்கை என்று பச்சோந்தித் தனமாகச் செயலாற்றி வருகிறார்கள். இக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் என்பன சுயமைத்தனம் மலிந்த சமுதாயமாக மாற்றிடவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழக விடுதலை ஏன் ?

மேற்குறிப்பிட்ட இழிநிலைகளை ஒழித்துத் தமிழக மக்களுக்கு உண்மையான—வளமான வாழ்வை உறுதிப்படுத்திட வேண்டுமெனில், அனைத்து வல்லரசு நாடுகளின் ஆதிக்கங்களை எதிர்ப்பதும், பன்னாட்டு மூலதனங்களையும், இந்தியப் பெருமுதலாளிகளின் மற்றும் தமிழகத் தரகு முதலாளிகளின் மூலதனங்களையும் பறிமுதல் செய்து உழைக்கும் மக்களின் உடைமையாக்குதல் வேண்டும். பெரும் நிலக்கிழார்களின், கோயில் மடங்களின் நிலங்கள், மற்ற உடைமைகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்து கடைநிலைக் குத்தகைக்காரர்களுக்கும், கூலி உழவர்களுக்கும் உடைமையாக்கிடல் வேண்டும். மக்களுக்கு நன்மை பயக்கும் உண்மையான மக்கள் சமநிலைக் குடியாட்சியை அமைத்துத் தருவதன் மூலம் மட்டுமே இவை அனைத்தும் செய்திட இயலும். இன்றைய அரசியல் சிறைக்கூடத்தில் அல்லலுற்றுக் கிடக்கும் நிலையில், மக்களுக்கு நன்மை பயக்கும் இந்த அடிப்படையான பணிகளை மேற்கொள்ள முடியாது என்பதற்கு, நேற்று கேரளத்திலும், இன்று வங்காளத்திலும், திரிபுராவிலும் ஆட்சிசெய்து வந்துள்ள—வருகின்ற பொதுவுடைமைக் கட்சிகளே எடுத்துக்காட்டுகளாக உள்ளன. ஆகையால், தந்தை பெரியார் குறிப்பிட்டதுபோல தமிழக மக்கள் விடுதலை என்பதே நாம் எதிர்கொண்டுவரும் அனைத்துச் சிக்கல்களையும் தீர்ப்பதற்கு ஒரு கட்டாயக் கடமையாக இருக்கிறது.

தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி

'தமிழக மக்களின் விடுதலைக்கு' இன்று செயல்பட்டு வரும் அரசியல் இயக்கங்கள் ஏதும் வழிவகுக்கா என்பதை நன்குணர்ந்த நிலையில், தமிழகத்தில் பாராளுமன்ற அரசியல் சார்பற்ற முறையிலும், மக்கள் நலன் கருதியும் இயங்கிவரும் கீழ்காணும் ஐந்து இயக்கங்களைச் சார்ந்த நாங்கள் "**தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி**" என்னும் ஒரு புரட்சி இயக்கத்தை அண்மையில் அமைத்து உள்ளோம்.

தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியின் குறிக்கோள்கள்

அனைத்து வல்லரசுகளின் கொள்ளைகளைக் குழிதோண்டிப் புதைக்கவும், அரசு - தரகு முதலாளியத்தின் மற்றும் அதிகார வர்க்கத்தின் கொட்டங்களை ஒழிக்கவும், சாதிய - நிலக்கிழமை அடிமைத்தனத்திற்கு முடிவு கட்டவும், உண்மையான மக்கள் குடியாட்சியை அமைத்திடவும் தமிழக மக்களின் விடுதலையைக் குறிக்கோளாக கொண்டுள்ளது இக்கூட்டணி.

இக் கூட்டணியினரை இன-மொழி வெறியர்கள், நாட்டைத் துண்டாடும் நாச சக்திகள், பிரிவினை வாதிகள், மக்கள் விரோதிகள் என்று ஆளும் கும்பல் பறை சாற்றலாம். மேற்குறிப்பிட்ட நச்சுச் சக்கரத்தில் சிக்கித் தவிக்கும் அனைத்துத் தேசிய இன மக்களும் உண்மையாக விடுதலை பெறவேண்டும் என்பதும், விடுதலை பெற்ற தேசிய இனங்களின் உண்மையான கூட்டாட்சியை இந்தியாவில் நிறுவிட வேண்டும் என்பதுமே இக் கூட்டணியின் இறுதி நோக்கங்களாகும்.

அவ்வகையில் இந்தியாவில் வாழும் பிற தேசிய இனங்களின் புரட்சி வழி விடுதலைக்குச் செயல்வடிவமும் ஆதரவும் இக்கூட்டணி நல்கிடும்.

மற்றும் உலகில் போராடும் அனைத்து மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கும் 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி' பக்கத் துணையாக நிற்கும்.

இக்குறிக்கோள்களுக்குச் செயல் வடிவம் நல்கிட தமிழகத்து இளைஞர்களையும், தொழிலாளர்களையும், உழவர்களையும், பிற அனைத்துத் தரப்பு மக்களையும் இங்கு அமைந்துள்ள **தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி** அறைகூவி அழைக்கிறது.

தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணியில் பங்குபெறும் இயக்கங்கள் :

1. உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்,
2. பெரியார் சம உரிமைக் கழகம்,
3. அறிவியக்கப் பேரவை,
4. தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ),
5. தமிழக மாநிலக் குழு, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மா. இலெ, மையச் சீரமைப்புக் குழு).

syndicate printers. madras-2

குறைந்து வருகிறது. இதனால் செயற்கை உரங்களை நம்பி வேளாண்மை செய்திடும் நிலையே பெருகி வருகிறது. மேலும் தழையுரங்களுக்குத் தேவையும்—ஆதாரமுமான மரங்களும் காடுகளும் பன்னாட்டுத் தொழிற்சாலைகளின் தேவைக்காக அழிக்கப்படுகின்றன. இதனால் மழையின் முறைமாறி எங்கும் வறட்சி, இல்லையேல் பெருத்த வெள்ளம் என்றுகி உழவர்களின் வாழ்க்கையின் அடித்தளமே ஆட்டங்கண்டு வருகிறது. இப் புதிய கூறுகளால் வேளாண்மைச் செலவு மளமளவென ஏறிவருகிறது—வந்திருக்கிறது. பெரும்பான்மை உழவர்கள் இதனால் பெருத்த நட்டத்திற்கு உள்ளாகி, அளவுக்கதிகமான கடன் தொல்லையால் சிக்கித் தவிக்கிறார்கள். இந்திய நடுவணரசின் விலை நிர்ணயக் கொள்கையோ உழவரின் வாழ்க்கையை மொட்டையடிக்கவே வழிவகை செய்துவருகிறது. சிறு நிலவுடைமையாளர்கள் பலர் தம் நிலங்களை விற்று வருகிறார்கள்; பலர் ஓட்டாண்டிகளாக உள்ளனர்; கூலி உழவர்கள் வேலையின்மை காரணமாக நகர்ப்புறத்திற்கு விரட்டப்படுகின்றனர்.

தமிழகத்தில் இன்று 70 இலக்கம் எக்டேர் விளைநிலங்களில் ஏறத்தாழ 40 இலக்கம் எக்டேர் நிலங்கள் வானம் பார்த்த நிலங்களாகத்தான் இருக்கின்றன. இவ்வாறு இருப்பினும், பருவமழையில் மூன்றில் இரண்டு பங்கு நீர் வீணாகக் கடலில் கலக்கிறது. தமிழகத்து அடிநிலங்கள் தொடர்ந்து இரண்டு வறட்சிக் காலங்களுக்குப் போதுமான நீரைத் தேக்கி வைத்துக்கொள்ளும் தன்மையுடையன. ஆனால் இதுவரை மழை நீரைத் தேக்கிப் பாதுகாத்திட எவ்வகையிலும் முயற்சியோ திட்டமோ மேற்கொள்ளவில்லை. இவ்வகையில் திட்டங்களை மேற்கொண்டிருந்தால் பெரும்பான்மையான உழவர்கள் இப் பசுமைப் புரட்சி வேளாண்மை முறையைப் பின்பற்றிடும் தேவையில்லாது இருந்திருக்க முடியும். மாறாக வல்லரசு மற்றும் முதலாளிய நாடுகளின் சுரண்டலுக்காகவே இந்திய நடுவண் அரசு இப் பொய்யான போலியான—பசுமைப் புரட்சித் திட்டத்தைப் புகுத்தி வருகிறது.

தொழிற் கொள்ளை

56,000-இற்கும் மேலான தமிழகக் கிராமப்புறங்களில் வாழ்ந்துவரும் நான்கு கோடி மக்களை அடிப்படையாகக் கொண்டே இங்கு தொழிற் திட்டங்களை வகுத்திடல் வேண்டும். அதாவது தமிழக மக்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கவும், முறையான வேளாண்மையை வளர்த்தவும், குடியிருப்பு, உடை, உடல்நலம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு அடைந்திடவும், வளங்கள் அனைத்தையும் பெருக்கிடும் வகையிலும் தொழில் திட்டங்கள் அமைதல் வேண்டும். ஆனால் நாம் காணும் தொழில் வளர்ச்சியோ இவை அனைத்தையும் சீர்குலைக்கும் வகையிலேயே உள்ளது. ஏனெனில், இங்கு ஏற்பட்டுவரும் தொழில் வளர்ச்சி என்பது, மேற்குறிப்பிட்ட வல்லரசு மற்றும் முதலாளிய நாடுகளுக்கும், இந்தியப் பெருந்தரகு முதலாளியக் கும்பலுக்கும், அதிகார வகுப்பிற்கும், எஞ்சியுள்ள பெரும் நிலவுடைமையாளர்களுக்கும் கொள்ளையடிப்பதற்கே வழிவகை செய்துள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்துப் பெரும் தொழிற்சாலைகளும் இவ்வகையிலேயே இயங்கி வருகிறது. இப் பெரும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உதிரி உறுப்புகளை உருவாக்கிடும் பல்வேறு துணைத்தொழில் உரிமையாளர்களாகத் தாம் பெரும்பான்மையான சிறு தொழில் உடைமையாளர்கள் உள்ளனர். தமிழகத்தின் தேவைக்கேற்ப மாற்றுத் தொழில்களை செய்யவோ, விரிவுபடுத்தவோ செய்ய இயலாமல் இப் பெரும் தொழிற்சாலைகளின் நுகத்தடியிலே கட்டப்பட்டுள்ளார்கள். படித்த இளந்தலைமுறையினர் பலர் முன்முயற்சியுடன் தொடங்கும்—இதுவரை இல்லாத புதிய தொழில்களுக்கு—எந்த விதமான உதவியும் இந்திய அரசு வழங்குவதில்லை. இதுதான் இன்றைய நடுவணரசின் தொழிற் கொள்கை. மேலும் இப் பெரும் தொழிலகங்கள் தமது சுரண்டலைப் பெருக்கிக்கொள்ள, இச் சிறு தொழிலகங்களுக்கிடையே கடுமையான கழுத்தை நெரிக்கும் போட்டியை முடுக்கி வருகிறது. இதனால் இச் சிறுதொழிலகங்கள் பெருத்த நட்டத்திற்கு உள்ளாகிக் கதவடைப்புக்கு இட்டுச் செல்கின்றன. குறைந்த கூலிக்கேனும் வேலைவாய்ப்புப் பெற்ற தொழிலாளர்கள் இதனால் வேலை இழப்பது நாளுக்குநாள் பெருகி வருகின்றது.

நடுவணரசின் அடகுவைத்திடும் வாணிகக் கொள்கை

நடுவணரசின் ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கை தமிழகத்தின் செல்வங்களைச் சூறையாடவே வழிவகுத்துள்ளது. வல்லரசுகளின் மற்றும் அதன் கூட்டாளிகளான இந்தியப் பெருந்தரகு முதலாளிகளின் நலனை உள்ளடக்கித்தான் இவ்வாணிகம் நடைபெற்று வருகிறது. இங்கு விளையும் அனைத்துப் பொருள்களையும் பன்னாட்டுச் சந்தையைக் கட்டுப்படுத்திவரும் வல்லரசு நாடுகளுக்கு அவர்கள் கேட்கும் விலைக்குக் கொடுப்பதும், இங்குள்ள தொழிலகங்களுக்கு வேண்டிய இயந்திரங்கள் கருவிகள் மற்றும் இதரப் பொருள்கள் வல்லரசுகள் நிர்ணயிக்கும் விலைக்கு வாங்குவதுந்தான் இந்திய நடுவண் அரசின் வாணிகக் கொள்கை. இதன் காரணமாக அன்றாட வாழ்வுக்குத் தேவையான பொருட்களின் விலை அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்த வணிகமுறை பணவீக்கத்திற்கு காரணமாகிறது. பணவீக்கத்தைத் தற்காலிகமாகத் தவிர்த்திட உலகவங்கி மற்றும் ஐ. எம். எஃப். போன்ற நிறுவனங்களிலிருந்து கோடிக்கணக்கான பணத்தைக் கடனாக வாங்கி வருகின்றது. இது மேலும் மேலும் நமது நாட்டைப் பன்னாட்டு மூலதனங்களுக்கு அடகு வைத்திடவே வழிவகை செய்துள்ளது.

கெடுக்கும் கல்விமுறை

இன்றைய இந்திய அரசியல் கட்டமைப்பைக் கட்டிக் காத்திடத் தேவையான அதிகார வர்க்கத்தையும், சுரண்டல் கொள்ளைக்குத் தேவையான கூலி அடிமைகளையும் உருவாக்கிவிடும் நோக்கில்தான் மதஞ்சார்ந்த அடிமைக் கல்வி முறையை இந்திய அரசு புகட்டி வருகிறது.

இக் கல்வி முறை வெற்று ஏட்டுச்சுரைக்காயாக இருக்கின்றது. ஒருபுறம் இக் கல்வி ஏழை மக்களிடம் தாழ்வுணர்ச்சியையும், இயலாமையையும், அடிமைத்தனத்தையும் வளர்த்து வருகிறது. மறுபுறம் இக்கல்வி மேட்டுக்குடியினரிடையே ஒட்டுண்ணித்தனத்தையும், நாட்டுப் பற்று அற்ற தன்னலத்தையும், கோழைத்தனத்தையும் வளர்த்து வருகிறது. இவர்களில் ஒருசிலர் அயோக்கியர்களாகவும் செயல்படுகிறார்கள். வாழ்க்கையில் எந்தவகையான பிடிப்பையும், மேம்பாட்டிற்கான உறுதியையும் வழங்க முடியாத இக்கல்வி முறையின் காரணமாகத் தமிழகத்தின் இளைஞர்கள் இன்று பலவகையிலும் சீரழிந்து வருகின்றார்கள்.

சீரழிந்துவரும் உடல்நலம்

அறிவியலும், மருத்துவமும் மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளதாகப் பறைசாற்றிடும் இக் காலத்தில்தான், மக்கள் பல்வேறு புதிய நோய்களால் அவதியுறுகிறார்கள்—மடிகிறார்கள். பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து வெளிக்கிளம்பும் கழிவுகளும், புகையும் காற்றிலிருந்து குடிநீர் வரை அனைத்தையும் நச்சுமயமாக்கி வருகின்றது. நகர்ப்புறங்களின் தெருக்கள் அனைத்தும் சாக்கடைகள்தாம். குடியிருப்பு வசதியின்றித் தவித்திடும் இலக்கக்கணக்கான மக்கள் இச் சாக்கடை ஓரங்களில் வாழ்ந்திடும் நிலையே இங்குள்ளது. கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படும்—படுத்தப்பட்டு வருகின்ற பல்வேறு பூச்சி மருந்துகள், தெளிப்பான்கள், செயற்கை உரங்கள் காரணமாக அச்சூழலும் இன்று நச்சாகி வருகிறது. இதனால் ஏற்படக்கூடிய பலவகையான நோய்கள் இறுதியில் மருந்து தயாரிக்கும் பெரும் பன்னாட்டுத் தொழிற் குழுமங்களின் சுரண்டலுக்கே வழிவகை செய்கிறது. இந்த வகையில் இந்தியாவைப் பன்னாட்டுத் தொழிற் குழுமங்கள் தடைசெய்யப்பட்ட மருந்துகளுக்கு விற்பனைச் சந்தையாகவும், புதியதாகக் கண்டு பிடிக்கும் மருந்துகளை ஆய்வு செய்யும் நிலைக்களமாகவும் பயன்படுத்துகின்றன.

மொழி அடிமை

உலகிற் சிறந்த இலக்கியத்தையும் வாழ்வியலையும் பண்பாட்டையும் படைத்தளித்த மொழி தமிழ்நாட்டின் பரந்துபட்ட பாமர மக்களின் மொழி. - ஆனால் இன்று அது இந்தி, ஆங்கிலம் என்னும் நச்சுச் சக்கரங்களில் சிக்கித் தவிக்கிறது. தமிழகத்தின் குடுமி அனைத்திந்தியத் தரகு முதலாளிகளிடமும், அயல் வல்லரசுகளிடமும் இருக்கும் நிலையில் இந்தி, ஆங்கிலத் திணிப்பு என்பது ஆளுவோரின் அரசியல் தேவையாகிறது. ஒரு மக்களினத்தை அழிக்கவேண்டுமானால் முதலில் அம்மக்களின் மொழியை அழித்தாலே போதும். இந்த வகையில்தான் இந்திய நடுவணரசு தமிழ்மொழியைப் பொறுத்த அளவில் இன்று செயல்பட்டு வருகிறது. நாளுக்கு நாள் ஆங்கிலம் இருந்த இடத்தை அகற்றவும், அவ்விடத்தில் இந்தி மொழியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தவுமான முயற்சிகள் திட்டமிடப்பட்டு நடத்தப்பெற்று வருகின்றன.

சாதிக் கொடுமை

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று மேடைதோறும் முழங்கப்படுகின்ற தமிழகத்தில் நலிந்த ஒடுக்கப்பட்டோருக்குச் சாதிக் கொடுமைகள் நித்தமும் பாடை கட்டுகின்றன, 'சாதிய நிலக்கிழமைச் சுரண்டல் முறை' தமிழகத்தை உள்ளிருந்தே கொல்லும் உட்பகையாக உள்ளது. ஆர்.எஸ்.எஸ்., மதவெறியர்கள், ஆதாய வேட்டையை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் மேல்சாதி நிலவுடைமையாளர்களின் அரசியல் மேல்நோக்கங்களிலிருந்தே சாதியப் போராட்டங்கள் வெடித்து வருகின்றன. முதுகுளத்தூர் முதல் நேற்று நடந்த புளியங்குடி சாதிக் கலவரம்வரை இப்பிற்போக்குச் சக்திகளின் அரசியல் நோக்கத்திலிருந்தே, பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சாதியினரைச் சார்ந்த ஏழைமக்களைப் பிளவு படுத்தி வந்துள்ளன.

பண்பாட்டுச் சீரழிவுகள்

'உலக நாகரிகத்தின் முன்னோடி' என்று வான் புகழ் கொண்ட தமிழ்நாட்டின் இன்றைய பண்பாட்டுச் சீரழிவுகளைச் சொல்லவும் நா கூசுகிறது. 'தாய்க்குலத்தின்' பெருமை பேசும் இம் மண்ணில் பெண்கள் விற்பனைப் பண்டங்களாகவும், சதைப் பிண்டங்களாகவும் நடத்தப் படுகின்றனர். திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள் அனைத்தும் இன்று அருவருக்கத்தக்க தாறுமாறான பாலுணர்வையும், பொருளற்ற வன்முறைகளையும் ஊட்டுகின்ற பண்பாட்டுச் சீரழிவுகள் ஒரு புறம்! மறுபுறம் மதவெறியர்களின் மதப் பரப்பல்கள் மூட நம்பிக்கைகள்! இவை இரண்டும் பெருமளவு மக்களைச் சீரிய சிந்தனையாளர்களாகவும் போராளிகளாகவும் மாறுவதைத் தடுக்கும் மதிமயக்கிகளாக, ஆளும் கும்பலால் திட்டமிட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக இளைஞர்களைக் கோழைகளாகவும், பிஞ்சிலே வெம்பியவர்களாகவும், நாட்டுச் சிந்தனை அற்றவர்களாகவும் மாற்றி வருகின்றன. இன்று நாம் காணும் தொழில் வளர்ச்சி என்பது, தொலைக்காட்சி, வானொலி, பல்வேறு அலங்காரப் பொருள்கள், பல்வேறு வகையான பொழுதுபோக்கு, (எலக்டிரானிக்) விளையாட்டுக் கருவிகள், இசைக் கருவிகள், சாராயம், பரிசுச் சீட்டு, குதிரைப் பந்தயம், அலங்கார நிலையங்கள், ஆபாசக் கூத்துகள் நிறைந்த நட்சத்திர விடுதிகள், கஞ்சா, அபின் மற்றும் பல்வேறுவிதமான மயக்க மருந்துகளை உற்பத்தி செய்வதே ஆகும். இவைதாம் நடுவணரசின் இன்றைய தொழில் வளர்ச்சியின் முக்கியக் கொள்கைகளாக இருந்து வருகின்றன.

தமிழக அரசின் இன்றைய இழிநிலை

'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்று தன்மான முழக்கமிட்ட தமிழகம், இன்று எத்துறையிலும் தற்சார்பின்றித் தில்லியிலுள்ள நடுவண் அரசிற்கும் அதன்

கொற்கைத் தமிழ் மன்றம் நடத்திய திருவள்ளுவர் சிலைதிறப்பு விழா -வானொலித் தொகுப்புரை-

புதுவை வழக்கறிஞர் திரு. தமிழூர். ப. அருளி :

"அன்பிலே மழைத்தண்ணீர் அறிவிலே
பெருநெருப்பு
ஆற்றலில் சூறைக்காற்று — உளத்
தென்பிலே மாமழை
தெளிவிலே நீர்நிலை திரிதலில் வானப்பறவை
என்பிலே நல்லுறுதி
இயல்பிலே தமிழுணர்வு
எண்ணத்திலே தமிழர் மேன்மை - வரும்
துன்பிலே துணிந்த மனம்
துயிலிலே விழித்தநிலை!
துவளாத வாழ்வு என் வாழ்வே"என்று தம் வாழ்

வைச் சீறுற நடாத்திக் கொண்டிருக்கின்ற எங்கள் தலைவர், உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தலைவர் முதல்வர் பாவலரேறு ஐயா அவர்களே, உரையாற்றிய அறிஞர் பெருமக்களே! பெயரைக் கூடக் குறிக்காத பற்றற்றார்-பற்றற்ற ஒரு துறவி திருவள்ளுவன். தவம் பற்றியும் மெய்யுணர்வு பற்றியும் ஆழ அகலமாகப் பல இடங்களில் சுட்டியவர் துறவுக்குரிய கோலமாக அன்றைக்கு ஏற்றுக்கொண்ட தோற்ற அமைப்பையே, பகடிபண்ணியவர் அவர், புறத்திலே இல்லை; அது அகத்தது என்றார். 'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்து விடின்' என்று வெளியில் இருக்கிற துறவுக்கோல நிலைகளிலே, தம்மை புனைவு பூசனை செய்து கொள்ளுகிற நிலையைக் கண்டித்தவர் அவர். 'துப்புரவில்லார் துவரத் துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று' என்று துப்புரவு என்பது மனத் துக்கண் மாசிலனாகின்ற அந்தத் தன்மையைச் சுட்டுவார். யான், எனது எனகிற சொற்கள் செருக்குச் சொற்கள் என்று சொல்லுகிற படியானது அவருடைய உள்ளம். புகழ் என்ற அதிகாரத்தையே வரைந்து, புகழ் என்பது ஒருவனுடைய வாணாளுக்குப்பின்னால் நின்று நிலவுவதாகிய பொதுமக்கள் - உலகமக்கள் அவனைப்பற்றிய கருத்துரை என்கிற கருத்தில் பல கோணங்களில் திருக்குறளிலே சுட்டியிருக்கிறார். தமிழர்களுக்கு ஒரு பண்புண்டு அதை வள்ளுவர் குறிப்பார்.

"பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்". கேட்டினைக்கொண்டு

ஊதியத்தைத் தவிர்த்து விடுவார்களென்று ஐயா. பாவலரேறு அவர்கள் 'திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு விழா' என்று தலைப்பிட்டுக் கொதித்து எழுதினார்கள்.

"திருக்குறள் பிறந்து ஈராயிரம்
ஆண்டுகள் சென்றன.
எனினும் செந்தமிழா இருக்கும் உன் நிலையினில்
இமி உயர்ந்தனையா? இழி வில்லையா?
உடல் சிமிழா?
பிறப்பினில் உயர்வு தாழ்வு ஒழிந்ததா?- அடஓய்!
பேசினை எழுதினை விரைப்பாய்!
மறப்பினை தம்பி உன் மடத்தனம் கயமை
மற்றெதற்கோ விழா சிறப்பாய்?
பசி பொழித்தனையா? பிணி யொழித்தனையா?
பகைப்புலம் வேரறுத் தனையா?
வசிக்கவும் குடிலிலா வாடுவோர் தமக்கே
வாழ்விலை; உயிரென்ன தினையா?
ஏய்ப்பவர் ஒருபால் மேய்ப்பவர் ஒருபால்
ஏழைபர் துடித்தனர் அவர்பால்?
காப்பதிங் கொருபால் கனிவதிங் கொருபால்!
காய்பவர் பெறுவதிங் கெவர்பால்?
சொல்லுதல் எளிது செய்கலே உயர்வெனச்
சொல்லிற்றடா நம் மூப்பால்!
வெல்லும் நாளன்றோ விழாக் கொண்டாட்டம்
வினையடா விளைவடா இப்பால்" என்று கொதித்து

எழுதியிருக்கிறார்கள். பதினைந்தாண்டுகளுக்கு முன்னால். நாம் வினைபடவேண்டிய காலம்; சிலை வைக்க வேண்டிய காலம் அன்று. ஆனால் அவற்றை நாம் நிலை நிறுத்திக் கொள்வதற்கு, நினைவுகூர்ந்து கொள்வதற்கு நன்றியுணர்ச்சியோடு நாம் வைக்க வேண்டிய ஒரு தேவையிலே நாம் இருக்கிறோம். மூலைக்கு மூலைக்கு சிலை வைத்திருக்கிற நிலையெல்லாம் கூடக் கண்டித்து எழுதியிருக்கிறார்கள்.

"ஊருக்கொன் றாய்ச்சிலையை ஊன்றுதலால்,
விழாக்களினால், உலகம்காணத் தேருக்குள்
அமர்ந்த வண்ணத் தோரணங்கள்
தலையிடிக்கும் தெருவலத்தால்"

அவனவனும் பெரிய கிரீடமெல்லாம் வைத்துக் கிட்டுப் போவது,

"தோரணங்கள் தலையிடிக்கும் தெருவலத்தால்" ஆரவாரப் படுத்திக்கிறது. புகழ் பெறுகிறதுக்காக.

ஆருக்கிங்கென்ன பயன்?
எத்தனையாண்டவை நிற்கும்?
ஆக்கங் காணும் வேருக்குள்ளன்றோ
நீர் விடல்வேண்டும்!' அடிப்படையை விளைத்தல் வேண்டும்! நாம் அடிப்படையைப்பற்றி, வினையைப் பற்றித் தமிழர்கள் என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றிக் கவலைப்படவேண்டும்".

திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்த உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் சிறப்புரையில்,

"பெருமைக்குரிய விழா நாயகராக இருக்கிற தகுதி திருவள்ளுவர் ஒருவருக்குத்தான் உண்டு என்கின்ற உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டு அருள்கனிந்து இறுதிவரை அமைதியாக இருந்து நான் உங்களிடத்திலே அன்புரையாகவும், அறிவுரையாகவும், பண்புரையாகவும், வேண்டுகோளாகவும் விடுக்கின்ற அந்த நல்லுரைகளைச் செவிமடுக்கும்படி அன்போடு வேண்டிக் கொள்கின்றேன். நீங்கள் இந்த உரைகளை ஏதோ ஒரு மேடைப்பேச்சு என்று கருதிக் கொள்ளக் கூடாது. இது நம்முடைய வாழ்க்கைச் சிக்கலை அவிழ்க்க வந்த வழிகாட்டுதல் உரையென்று கருதிக் கொள்ள வேண்டும். திருவள்ளுவர் என்ற சொல்லும், திருக்குறள் என்ற சொல்லும், இந்தக் குறளும், அதை எழுதிய பெருமகனும் எந்த இனத்திலே தோன்றினார்களோ அந்த இனத்தாராலேயே முழுமையாகச் சொல்லப்படத் தெரியாதசொற்களாக இருக்கின்றன. எந்த இனத்தை உய்விக்க வேண்டும் என்று எண்ணித் தம்முடைய வாழ்க்கை முழுமையும் செலவிட்டு மிக ஆழமாகவும் அகலமாகவும் சிந்தித்து, அந்தக் கருத்துகளை எந்தக் காலத்திலே வெளிப்படையாகச் சொல்ல முடியதோ அந்தக் காலத்தில் வேறு வகையான முறையிலே, அது நம் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்கின்ற கவலையிலே திருக்குறளை எழுதிய இந்த இனத் தலைவன், மூல முதல்வன், திருவள்ளுவன இந்த நாட்டிலே இந்தத் தமிழின மக்களாலே நினைவுபடுத்தப்படுகிறார் என்று சொன்னால் இதைவிட வேறு இழிவே நமக்கு வேண்டியதில்லை. தமிழர்கள் இந்த நூலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள் என்று தெரிந்துதான் ஒரு குறளை எழுதியிருக்கிறார். அது என்ன குறள்? அறியாதவன் கையிலே இன்றைக்கு ஏதோ ஒரு பரிசுச் சீட்டு விழுந்து ஓர் இலக்க உருபா அல்லது ஒரு பத்துலக்க உருபா கையில் கிடைத்து விட்டால் அவன் என்ன செய்வானும்? அந்தப் பணத்தை எடுத்து எல்லாருக்கும் கொடுப்பானும். ஆனால் தன்னுடைய சொந்தக்காரர்களுக்கு, தன்னுடைய உறவினர்களுக்கு, தன்னுடைய குடும்பத்தினர்க்குத் தர மாட்டானும். இதைத் திருவள்ளுவர் சொல்லுகிறார்.

'பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை" - ஒரு அறியாதவன, மூடன் பெரிய செல்வத்தைப் பெற்று விடுவானால் "ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர்" என்று சொல்கிறார். மற்றவர்களெல்லாம் நன்றாகச் சாப்பிட அவனைச் சேர்ந்த உறவினர்கள், குடும்பத்தினர்கள் பசித்துக் கிடப்பார்கள் என்று சொல்கிறார். பேதையினுடைய தன்மையை, அறியாதவனுடைய தன்மையை, மூடனுடைய தன்மையை இதைவிட அழகாக யாருமே சொல்ல முடியாது. அந்த அளவுக்குத் தமிழினத்தைக் கணித்துத் திருக்குறளை எழுதியிருக்கிறார். தமிழினத்தைப் பார்த்துத்தான் திருக்குறளை எழுதினார். தமிழினத்தைப்பார்த்து எழுதின அந்தத் திருக்குறள் தமிழர்கள் படிக்க வேண்டும், தமிழர்கள் கவனிக்க வேண்டும். அதிலே என்ன சொல்லப்படுகிறதென்பதை அவர்கள் உணர வேண்டும். உணர்ந்து அதன்படி நடக்க வேண்டுமென்பதற்காக எழுதினார். திருக்குறளை மட்டுமன்று வேறு எந்த அறிவு நூலாக இருந்தாலும் சரி; அல்லது வேறு எந்த அறிஞர்கள் எழுதிய உயர்ந்த வாழ்க்கை நூலாக இருந்தாலும் சரி அதைக் காப்பதற்கு முதலிலே ஓர் இனம் வேண்டும். அந்த இனம் வாழ்வதற்கு ஓர் உரிமை நிலம் வேண்டும். அந்த உரிமை நிலமும் அந்த இனமும் என்றென்றும் இருப்பதற்கு அந்த இனத்துக்கு ஒரு மொழி வேண்டும். இதுதான் உலக மெய்மம்; உலகத் 'தத்துவம்'. அந்த ஓர் இனம் என்கின்ற அந்த மக்கள் வாழ்கிற நிலத்தைத்தான் ஒரு நாடு என்று சொல்ல முடியும். ஒரு நாடு என்று சொன்னால், ஒரு வீடு என்று சொல்லும்பொழுது எப்படி அந்த வீட்டுக்கு உரியவர்கள் மட்டும்தாம் அந்த வீட்டிற்குள்ளே வாழ்வார்களோ அதைத்தான் வீடு என்று சொல்லலாம். எல்லாரும் சேர்ந்து வாழ்கிற வீடாக அது இருந்தால், அது வீடு அன்று. அது சத்திரமாக இருக்கும் அல்லது சாவடியாக இருக்கும். ஒரு கோழி தன்னுடைய குஞ்சைத் தூக்க வருகிற ஒரு கழுகைத் தன்னால் இயன்ற அளவு எம்பி, வானத்திலே பறந்து எதிர்த்துப் போராடுவது உயிரியற்கை. இதுதான் உயிரின் இயற்கை. எறும்புக்கூட்டத்திலே எவனாவது தெரியாமல் கால்வைத்துவிட்டால், அத்தனை எறும்புகளும் சேர்ந்து அவனைக்கடித்துத் துன்புறுத்துகின்றன. போராடுகின்றன. தன் இனத்தை அழிக்க வந்துவிட்டான் இவன் என்று கருதுகின்றன. ஆனால் அதிலே கால்வைத்தவன் அந்த எறும்பு இனத்தை அழிப்பதற்காகக் வைக்கவில்லை, தெரியாமல் வைத்துவிட்டான். தெரியாமல் வைத்தாலும்கூட அந்த எறும்புக்கூட்டம் அவனை விடுவதில்லை. தன் இனத்தைக்காக்க வேண்டும் என்கின்ற உணர்ச்சி உலகத்திலே உயிரினமாக இருக்கின்ற அத்தனை உயிரினங்களுக்கும் உண்டு. ஆனால் எல்லா இனங்

தொடர்ச்சி 7- ஆம் பக்கம் பார்க்க)

உ.த மு.க உறவுமடல்:

எங்களை ஒன்றாக வாழ விடுங்கள்

எங்களுக்குச் சாதியுமில்லை, மதமுமில்லை. உழைத்தால் கஞ்சி. எங்களிடம் வந்து கோள்மூட்டி விட வேண்டாம்-என்று மக்கள் கூறுகிறார்கள்!

"நாங்கள் எங்கள் குலதெய்வங்களைக் கும்பிட்டு வருகிறோம். அவற்றை நினைக்கக்கூட நேரமில்லாமல் நெஞ்சொடிய உழைக்கிறோம்" என்று அவர்கள் நெடு மூச்சுவிடுகின்றார்கள்!

காளி, கறுப்பன், முருகன் என வளர்ந்து வந்த எங்கள் உறவுகளைத் தமிழ்மொழி வலுப்படுத்தி வந்தது தமிழாய்ந்த பெருமாளும், தமிழுமேதெய்வங்களாக விளங்கி வந்தன! இன்று 'இந்து' என்றும் 'இந்துமுன்னணி' என்றும் எதையெதையோ சொல்லி வருகிறார்கள்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற படியாலே 'முசுலீம்' என்பவரும் சமயநெறியாலும் தமிழாலும் ஒருதாய் மக்களாகவே தமிழ்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். வீரமாமுனிவரும் இங்கே தமிழராகக் கிறித்தவம் பரப்பிச் சைவ அன்பு நெறியைத் தழுவினார்! எங்களின் இணக்கம், கருத்தின் இணக்கம்; காலத்தின் இணக்கம்; தமிழின் இணக்கமாகும்! தென்னாடுடைய சிவனே போற்றி!' என்றவர்கள் இருந்த இடம் தெரியவில்லை. சைவம்' சங்கராச்சாரிகளின் புதிய அவதாரங்களால் 'இந்து'வாக்கப்படுகிறது. திருமாலியமும் தளைப்பட்டுக் கிடக்கின்றது!

சைவம், திருமாலியம் நமக்குச் 'சிறுமை பெருமை' யுடையனவாக முரண்பட்டுக் கிடக்கலாம். 'தாய் மண்ணில் விளைந்த உண்மைகளை' ஏற்கவும் வளர்க்கவும், மாற்றவும் நமக்கே உரிமை. இவ்வரிய தமிழ்ச் சமயங்களைப் புதைத்துப்போடும் வேலையை அன்று 'விவேகானந்தர்' பண்ணவும் இன்று அவர்களின் 'அடியாட்கள்' அதே வேலையினைத் தொடரத் தொடங்கி விட்டார்கள்! 'இந்து முன்னணி' இதனை முடுக்கத் தொடங்கிவிட்டது!

தமிழரின் தேசியம் தமிழிலும் அவர்களின் சமய வுணர்வுகளிலும் வெளிப்படும். அவர்களை எவ்வகையான மேல்அழுத்தத்தாலும் ஒடுக்குகின்ற நிலைமைகளை அனைவரும் எதிர்த்துப் போரிடுதல் வேண்டும்!

பறம்பை அறிவன்

காய்பவர் பெறுவதிங் கெவர்பால்?

இந்திராகாந்தி சாம்பல் வணக்கத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்ததைப் பாராட்டியும், நடுவர் தீர்ப்பைக்கண்டித்தும் அன்புள்ளங்கள் எழுதிய மடல்கள்!

தங்கள் முயற்சிஆறுதலளிக்கிறது!

அன்புடையீர், வணக்கம். இந்தியத் தலைமை அமைச்சர் மறைந்த திருவாட்டி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எரிக்கப்பட்டு அச் சாம்பல் அரசுச் செலவில் இந்தியா முழுவதும் உலா வந்ததை எதிர்த்து "இச் செயல் மூடத்தனமானது; அறிவியல் உணர்வை வளர்க்க வேண்டும் என்ற அரசியல் சட்டப்பிரிவுக்கு முரணானது" எனத்தாங்கள் வழக்குத் தொடுத்துள்ளதை செய்தித்தாள்களின் மூலமறிந்தேன்.

நடுவண், மாநில அரசுகளின் இச்செயலை எதிர்த்து ஏதும் செய்ய இயலாமல் குமுறிக்கொண்டிருக்கும் எம்மைப் போன்றோருக்குத் தாங்கள் வழக்குத் தொடுத்த செய்தி மிகமிக ஆறுதலளிப்பதாயிருக்கிறது.

தங்களின் இம்முயற்சிக்கு - அரசியலாரின் மூடத்தனத்தையும், அறிவின்மையையும் வெளிக்கொணரும் இம் முயற்சிக்கு. என் நன்றியையும், மகிழ்ச்சியையும் தங்களுக்கு உரித்தாக்குகிறேன். தங்களன்புள்ள,

— ஆ. இராசசேகரன். சென்னை-33

Dear Sir,

May I have the privilege of introducing to you myself. I am a practising lawyer at Mayiladuthurai. I had occasion to go through the news columns in the Hindu dated 13-11-1984 on page 12 captioned 'Rationalist indicted for his sacrilege' about your Writ in the Madras High Court in the matter of exhibiting the ashes at the expense of the State Ecchequer.

I am very glad to see your bold endeavour to hint at the Goverment's misdeeds and Peoples' folly. Your attempts to serve the country by coming forward to reform the people and refine their thinking should not be allowed to be criticised by a Judge who had the opportunity to induct his personal convictions into the order which has the effect of undermiming the confidence reposed in Courts of law by the public.

The Judge's comments are really shocking and highly objectionable. He has used a language unbecoming of a High Court Judge.

I first though of writing to The Hindu in the letters to the Editor columns. But I do not think they will publish my letter.

I am writing this to assure you that there are number of people like me praising and greeting you for your daring venture as a single man. I hope this would be exhilarating to you in your pursuit to reform the society and to educate even the educated who are reluctant to shed their blind beliefs and think rationally. Your service will not go unrecognised.

I kindly request you to get the full text of the order and send me a typed copy. if you please. Please do file an appeal against the 'findings' of the Judge and press for expunction of the objectionable and irrelevant observations and comments. These comments can attract even strictures. Normally in civil suits an appeal can be prepared against a 'finding' irrespective of the result of the case. But I have no idea as to what is the position in writ matters. The remarks may also be characterised as 'Obiter dictum' in which case no appeal can be filed. Please consult lawyers conversant with constitutional law and writ matters. I am enclosing a draft prepared by me for writing to the Hindu. If you find it convenient and proper you can use this while arguing the appeal. (please take care to see that you are not ensuared by people of perverted thinking for committing contempt of Court.) I am also sending a few grounds which you may raise in the appeal. Though I am able to understand that you know for better than most lawyer my enthusiasm drives, me to place these for your choice.

Wishing you Success in all your efforts.

Sincerly yours,
S. Nethaji, Advocate, Mayuram

நடுவர்மேல் மானஇழப்பு வழக்குத் தொடருங்கள்!

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஐயா அவர்களுக்கு வணக்கம்.

13.11.84 வெளிவந்த 'இந்தியவிரைவான்' (Indian Express) நாளிதழில் தலைமை அமைச்சர் மறைந்த பிறகு, அவரது சாம்பலுக்கு மதிப்பளித்தல் என்ற பெயரால், அரசின் கருவூலத்தில் இருந்து தொகை செலவிடப்படுதல் எப்படிச் சரியாகும் என்ற வகையில் தாங்கள் பதிந்திருந்த முறையீட்டைத் தள்ளுபடி செய்த நடுவர் தமது விளக்கத்தில், தேவையானவற்றைக் குறிப்பிடாமல் (அஃதாவது சட்டத்தின் எந்தப் பிரிவின்படி அது சரி அல்லது எந்த முன்னிகழ்வின் [legal convention] படி அப்படிச் செய்வது சரி என்று தெரிவிக்காமல்) தங்களின் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தைக் குறை கூறியும், அவர் (நடுவர்) ஏற்றிருக்கும் பொறுப்பிற்குத் தொடர்பிலாமல் தம்மை இந்திரா பேராயத்தின் பேராளர் போல் எண்ணிக் கொண்டு, இந்திராவின் புகழுரைகளைப் போட்டு நிரப்பியும் உள்ளதைக் கண்டபின்னர், அவருடைய இத்தகாத செயல் மக்கள் மன்றத்தில் கொண்டு வரப் படவேண்டும் என்று கருதி, கீழ்க்காணும் குறிப்புகளைத் தங்களுக்குத் தெரியப்படுத்த விழைகின்றோம் அவற்றின் அடிப்படையில் தாங்கள் அந்த நடுவரின் மேல் மான இழப்பு வழக்குத் தொடர்ந்து இழப்பீட்டுத் தொகை கேட்கலாம் அல்லது மேல் முறையீடு an appeal to full bench) செய்யலாம்.

குறிப்புகள் செய்தித்தாளில் வெளிவந்த பகுதித் தீர்ப்பின் அடிப்படையில் உள்ளன. முழுமையான தீர்ப்பில் மேலும் பல முறைகேடுகள் இருக்கக் கூடும்; அவற்றையும் இணைத்துக் கொள்ளலாம். (இயலுமாயின் முழுத்தீர்ப்பையும் அனுப்பி வைக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்)

செய்தியாளர் கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து அரசியல் எந்த அளவிற்கு அறமன்றத்துறையில் தலையிடுகிறது என விளக்கலாம் என்ற கருத்தும் எங்களுக்கு எழுந்தது.

இவை எங்கள் உள்ளங்களின் வெளிப்பாடுகள். எப்படிச் செய்தால் சிறப்பு எனத் தாங்கள் அறிவீர்கள். எனவே இத்துடன் முடித்துக் கொண்டு குறிப்புகளை அடுத்தப் பக்கம் தருகின்றோம். தங்கள் பணிவன்புள்ள,

சு. இளங்கோவன்-திருச்சி-13.

நடுவரின் வாசகம் ஓர் ஏளனக்கூற்று!

அன்புடையீர், புலவர், ஐயா, அவர்கட்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துத் தாங்கள் நலம் பெற்று நீடுவாழ வாழ்த்தி, மடலைத் தொடர்கிறேன். மழலைத் தமிழ் பயிலும் மாணவன்யான். எனினும்யான் ஏழுபிள்ளைகளுக்குத் தந்தை! என் மனத்தில் புதைந்து கிடந்த மருமத்தை, வெளியிட்டது போல இருந்தது, இன்றைய (13-11-84) தினமணி இதழ்ச் செய்தி படித்த எனக்கு, - . எப்படிதான் இச்செய்தியிதழ் ஆசிரியர் என் சிவராமன். அவர்கள் இசைந்து வெளியிட்டாரோ, என எண்ணினாலும் அவர்க்கும் என் நன்றி உரித்தாகுக. - மற்றும் - உயர்நெறி மன்றத்தின் மேலும், தாங்கள் போட்டிருந்த உரிமை (ரிட்) முறையீட்டில் சாதிமதச்சார்பற்ற, எனும்பொருள் பற்றி சிக்கலுக்குரிய வகையில் தீர்ப்பு வழங்கியது குறித்துத் தாங்கள் கவனிக்கவும். தீர்ப்பின், தள்ளு படி, வாசகம் தங்கள் வயம் இருக்கும், ஆகையால், கவனமூட்டுகிறேன், மேலும், நீங்கள், சாதிமதசார்பற்ற, நாடு இந்தியா என்பதின், சட்ட நுணுக்கப், பொருள் புரிந்து கொள்ளவில்லை, என கூறும் வாசகம், ஓர் "ஏளனக்கூற்று, மற்றும் கடைசி வாசகம்" உலகில் வேறு எந்த நாட்டிலும் இந்த உரிமை, கிடையாது, (அஸ்தி) சாம்பல் ஊர்வலம் வருதல், மக்கள், மதிப்புச் செலுத்துதல் போன்றவற்றைத்தடுக்க வழக்கு போடும் உரிமை' எனும் நடுவரின் வாசகத்தில் தொக்கி, நிற்கும் ஓர் உண்மை. இது, உங்களைப்போன்று உலகில் உயர்நெறி மன்றம், சென்றோர் யாரும், கிடையாது. நாட்டுத் தொண்டு நலன், கருதி. என்றே பொருள் கொள்ளவும்.

— இரா. சண்முகம் - சாத்தனூர் (வ.ஆ)

தங்கள் அஞ்சாமை மிக்குயர்ந்தது !

மாண்புநிறை ஐயா, வணக்கம்.

இந்திரா அம்மையாரின் மறைவின்பின் அவரின் எலும்பும் சாம்பலும் அனைத்து மாநிலங்களுக்கும் அனுப்பிய முறையும், அதற்காக ஆட்சியில் இருக்கும் அமைச்சர்கள் கற்றவர்களான அதிகாரிகள் மதிப்புச் செய்தது, படையினர் வணக்கம் தெரிவித்தது போன்ற செயல்கள், நாகரிகம் வாய்ந்த மக்கள் வாழும் நாட்டில் செய்யக் கூடியவையா? என மனம் குமைந்து பலரிடமும் கருத்து அறிவித்து வந்தோம்.

எம் கருத்தையே தாங்களும் வலிந்து கொண்டு அதை வெளிப்படுத்தும் முகத்தான் உயர்நெறி மன்றத்தில் வழக்கு தொடுத்தது பெருமகிழ்வை அளித்தது.

வலிந்தவன் செய்தால் அதையே 'ஆமாம்' எனத் தலையாட்டும் மாந்தர்க்கு அறிவுறுத்திய செந்நாப் புலவர் தாங்களே! தங்களின் அஞ்சாமை அந்நாள் புலவர்க்கு இருந்ததிலும் மிக்குயர்ந்தது. இது வல்லாண்மை அரசையே அசைத்தது என்றால் மிகை அன்று.

ஆயின் கட்சிப் பற்றாளரால் தங்களுக்கு ஏதம் ஏதேனும் நேர்ந்ததோ என அஞ்சினும் தங்களை அவை ஒன்றும் செய்துவிடா. 70 கோடிப்பேரில் ஆண்மை கொண்ட உங்களை எப்படி வாழ்த்துவது, புகழ்வது என்றே மலைத்து நிற்கிறோம்.

இவண், அன்பு, — தமிழ்மணி, வேட்டாங்குளம்.

தொடர்ச்சி 7-ஆம் பக்கம் பார்க்க

5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி

களுக்கும் உண்டு தமிழினத்துக்கு மட்டும் இல்லை. இந்த உணர்ச்சி எப்பொழுது தமிழினத்திற்கு இல்லாமற் போனதோ அன்றைக்கு அது அடிமையாகப் போனது. அது காலத்தில் தான் அந்த வேலை நடந்தது. எந்த வேலை? தமிழ்மொழியை அழிக்கிற வேலை; தமிழினத்தை அழிக்கிற வேலை; தமிழ்நாட்டை அழிக்கிற வேலை திருவள்ளுவர் காலத்திலே நடந்தது. அந்தத் திருவள்ளுவர் காலத்திலே கடந்து கொண்டிருந்த அந்த வேலையை யாரும் தடுக்கவில்லை. அந்தக் காலத்திலே அந்தக் காலநிலைகளை, அந்த மாந்தஇழிவுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று எண்ணினாரோ அதே அளவிலேதான் இந்த இனம் இன்னும் இருக்கிறது. இன்னும்சொன்னால் இன்னுங்கேடு கெட்டுக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறது. எனவே தான் திருவள்ளுவர் என்ன சொன்னாரோ அதை நாம் கேட்க முடியவில்லை. திருவள்ளுவர் என்ன எழுதினாரோ அதை நாம் படிக்க முடியவில்லை."

அன்று இரவு 12 மணிஅளவில் தச்சநல்லூர் திருவாட்டி மு. செல்வத்தாயம்மாளின் செந்தமிழ் வில்லிசைக்குழுவினர் வழங்கிய தாழையூற்றுப் புலவர் திரு. அதியமானின் "ஔவையார்" - வரலாற்று வில்லிசை நிகழ்ச்சியுடன் கொற்கைத்தமிழ் மன்றப் பொருளர் திரு. வில்சன் வெள்ளையா நன்றி நவில, ஏரல் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சிகள் இனிதே நிறைவெய்தின.

இதுவரை அண்மையில் ஏரல் கொற்கைத் தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற திருவள்ளுவர் சிலைத்திறப்பு விழாவின் வானொலித் தொகுப்பினைக் கேட்டீர்கள்.

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலையில் 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

— அமைச்சர்.

குலப்பட்டங்களைக் குப்பையில் போடுங்கள்!

அன்புள்ளங்களின் மடல்கள்...

(6-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேல் முறையீடு செய்யுங்கள்!
முயற்சியைக் கைவிடாதீர்கள்!

"உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் தலைவரான, மாண்புமை ஐயா பெருஞ்சித்திரனார்" அவர்களுக்கு, திருச்சி நடுவண் சிறையில் வாழ்நாள் தண்டனையைக் கழித்துக் கொண்டிருக்கும் ஒரு சிறையாளியான சி. இராசமோகன், பணிவன்புடன் எழுதிக் கொண்ட மடலாவது :

ஐயா, தாங்கள்; இந்திராகாந்தியின் சாம்பலைப் பொதுமக்களின் பணத்தைச் செலவிட்டு, நாடு முழுவதும் கொண்டு சென்று காட்சிப் பொருளாக்கியது குறித்து எதிர்ப்புச் செய்து, உயர் நெறி மன்றத்தில் கொடுத்திருந்த 'ரிட்' முறையீட்டின்மீது, நடுவர் எசு. நடராசன் என்பார் வழங்கியிருந்த தீர்ப்பின் விளக்கத்தை. 13.11.84 'தினமணி' நாளிதழின் 3-ஆம் பக்கத்தில் கண்டு, படித்துப் பார்த்தேன்.

தங்களின் கருத்து மிகவும் சரியானது. அதற்கு, நடுவர் வழங்கியுள்ள தீர்ப்பு ஓரவஞ்சனையான (பாரபட்சமான)தாகவும், அரசியல் சார்பு கொண்டதாகவும் உள்ளது.

ஒரு குடியரசு நாட்டில் (?) ஒரு தலைமை அமைச்சர் இறந்தால் - அல்லது கொலையுண்டால். அவரது உடலை எரித்தல் அல்லது புதைத்தல் வரையிலான செலவுகளை, அரசு ஏற்றுச் செலவிடுவதைப் பொறுத்துக் கொள்ளலாம், ஆனால், எரித்த 'சாம்பலை'க் குடங்களில் நிரப்பி, தனித் தொடர் வண்டிகளிலும், வானூர்திகளிலும் ஏற்றி நாடு முழுவதற்கும் அனுப்புவதற்கும், பிறகு அதைத் திரும்ப ஒரு நடுவான இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்கும் ஆகும் செலவுகளை, முறைப்படி தலைமையமைச்சரின் குடும்பமோ அல்லது கட்சியோ ஏற்பதுதான் முறையும்-நயன்மையும் (நீதியும்) ஆகும். அதை விடுத்துச் சாம்பல் குடங்களை நாடு முழுவதற்கும் அனுப்பி வைத்தும் மீண்டும் திரும்பப் பெற்றும், அதன் பின்பு ஒரு வானூர்தியில் 375 கல் (600கி.மீ) தொலைவு இமயமலைகளின் மீது பறந்து சென்று தூவியதும், அந்த வானூர்திக்கு மதிப்புச் செலுத்துவதற்காக (அல்லது - பாதுகாப்புக்காக ?) போரணியின் 2 வானூர்திகள் உடன் சென்று வந்ததும் கூட, அரசின், செலவிலேயே கூட்டப்பட்டுள்ளது, பெரிய அறக்கேடே (அநீதியே)யாகும்!

சாம்பல் குடங்களை 'நாடுவலம்' அனுப்பியதால், மறைந்த அம்மையாரின் 'புகழ்', புதிதாகப் பெருகிவிடவில்லை! மாறாக, அதன் வாயிலாக, தம் குடும்பத்துக்கும், தமது கட்சிக்கும் சாம்பல் குடங்களைக் கொண்டு பெரியதொரு விளம்பரத்தையும், மக்களின் இரக்கத்தையும், மறைந்த தலைமையமைச்சரின் மகன் (ராசீவ்) திட்டமிட்டே தேடிக் கொண்டுள்ளார். இதனால், வரவிருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் அவர்களின் கட்சிக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம். அதனால் பயன் பெறுவதால், அந்தப்பயனும் தற்காலத் தலைமையமைச்சர்க்கும் அவரது கட்சிக்குமே பெரும் ஊதியம்! இப்படிப் பெறப்போகும் ஊதியத்துக்காகத் தலைமையமைச்சரோ அல்லது அவருடைய பேராயக்கட்சியோ தாம் செலவிட்டிருக்க வேண்டுமேயல்லாது, அரசின் பணத்தைச் செலவிட்டிருக்கக் கூடாது என்பதுதான், எனது உறுதியான கருத்துமாகும்.

"தமக்குள்ள சிறப்பதிகாரத்தைப் பயன்படுத்தி, ராசீவ்காந்தியைத் தலைமயமைச்சராக அறிவித்தேன்" என்று, குடியரசுத் தலைவர் கூறுகிறார். இத்தகைய தனியதிகாரம். இங்கிலாந்தின் அரச குடும்பத்துக்கும் உள்ளது, என்றும் கூறுகிறார். அதையும் சரியென்றே கொண்டாலும், இங்கிலாந்து நாட்டு அரசு, அதன் தலைமையமைச்சர்களில் மிகவும் புகழ் பெற்றவரான சர்ச்சிலின் இறுதிச்சடங்கு (உடலடக்கம்) வரைதான் செலவிட்டிருக்குமேயன்றி, உடலை ஆங்கில வல்லரசின் நாடுகளுக்கெல்லாம் வானூர்திகளிலும், கப்பல்களிலும் ஏற்றி (உலகம் சுற்றிவர) உலா அனுப்பியிருக்காது' என்ற உண்மையை மட்டும், குடியரசுத்தலைவர், (தமது பதவிநீடிப்புக்கு வாய்ப்பாக) மறந்து விட்டார் போல் தோன்றுகிறது! அமெரிக்க நாட்டில் 5,6 குடியரசுத் தலைவர்கள் கொல்லப்பட்டதாக வரலாறு கூறுகிறது. அவர்களில் கென்னடியின் இறப்புத்தான் எனக்குத் தெரியும். (என் அகவை 40 தான்). ஆனால், கென்னடியின் சடலத்தை அமெரிக்காவின் 50 மாநிலங்களுக்கும் உலா அனுப்பி விளம்பரம்தேட யாரும் எண்ணவோ, முயற்சி செய்யவோ கிடையாது! அமெரிக்காவைவிட 'இந்தியா'வின் பொருளியல் வலிமையானதும் அன்று! இவற்றை யெல்லாம்விட, முன்னாள் தலைமையமைச்சர் சாத்திரி அவர்களின் இறுதிச்சடங்கு கூட, இவ்வளவு ஆரவாரமாகச் செய்யப்படவுமில்லை, சாம்பல் குடங்களை 'நாடு வலம்' அனுப்பவுமில்லை.

எனவே, "இந்திராவின் சாம்பல் குடங்களை நாடு முழுதும் அனுப்பியதும். இமயமலைகளின்மீது தூவியதும், தம்க்கும், தமது கட்சிக்கும், அதன்மூலம், தேர்தலால் கிடைக்கும் என்று கருதும் வெற்றி வாய்ப்புகளுக்காகவுமேயன்றி, மறைந்த தலைமையமைச்சரின் சாம்பலுக்கு மதிப்புப் பெறும் ஒரே குறிக்கோளுக்காக மட்டுமே அன்று. இதற்காக மக்களின் பணத்தை வீண் விரயம் செய்ய, யாருக்குமே உரிமை கிடையாது. இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், சென்னை உயர்நெறி மன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு, நயன்மையானது அன்று; பிணத்தை எரித்ததற்குமேல், செய்யப்பட்ட செலவுகளைத் தலைமையமைச்சரும் அவரது கட்சியுமே ஏற்றுக்கொள்வதுதான் முறையாகும்" என்று குறிப்பிட்டு, உச்சநெறி மன்றத்தில் மேல் முறையீடு (அப்பீல்) செய்யுங்கள், அங்கு எப்படித் தீர்ப்பு வழங்குவார்களோ-பார்க்கலாமே? அங்கும் அது போன்ற தீர்ப்பே கிடைக்குமானால், "மதச்சார்பற்ற ஓர் அரசின் அறத்துறை, இந்துமதச்சார்பான 'மனுநீதி'யை அடிப்படையாகக் கொண்டு, சடங்குகளுக்குத் தூய்மை கற்பித்து, (இந்து) மதச்சார்புடன் செயல்படுவது கூடாது" என்று மீண்டும் ஒரு வழக்கை உயர்நெறி மன்றத்திலேயே முறையீடு செய்யலாம்! முயற்சியைக் கைவிடாதீர்கள். இறுதி வெற்றி, இந்தத் தமிழ்க் குமுகாயத்துக்கே! என்னையும், எனது நோக்கங்களையும் குறித்துப் பின்னர் விரிவாக எழுதுகிறேன். வணக்கம். இப்படிக்கு, இனமானப் பற்றுமிக்க ஒரு தமிழன், சிறையாளி சி. அரசழகன் - நடுவண் சிறை-திருச்சி.

புலன்கெட்ட புல்லாங்குழல்களின் இழிசெயல்!

அன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா அவர்கட்கு, திருச்சி நடுவண் சிறையாளி எண் 72901 சீ முத்துக்குமாரசாமி வரையும் மடல்! தங்களின் "தமிழ்நிலம், 'தென்மொழி', தமிழ்ச்சிட்டு" இதழ்கள் எனது நண்பர் சுந்தருக்கு அனுப்பி வருகின்றீர்கள். அவற்றைத் தொடர்ந்து அனுப்பி வைக்க அன்புடன் வேண்டுகிறோம்! தாங்கள் உயர் அறநெறி மன்றத்தில் முறையீடு செய்த கட்டளை வேண்டுகை (writ petition) விளக்கத்தை முரசொலி மூலம் அறிந்தேன்! மிக்க மகிழ்ச்சி!

சுட்டெரித்த சாம்பல்
சுற்றுலாப் போக்கர்போல் வானக்கப்பலில் வலம் வந்து, வணங்கிச் சிலரை -
அழைத்து நிற்க, ஆளுநர் முதல் அமைச்சர் வரை அடிபணிந்து மலர் சூடி
பண்டியிட்டுத் தொழுது நிற்க,
மண்டபத்து வாயிலோ
விழாக்கோலம் பூண்டு நிற்க,
தமிழனின் மானம்
தரையில் புதைவதைத்
தாங்காத, தங்கள் நெஞ்சம்
புலன்கெட்ட புல்லாங் குழல்கள்
புரிந்திட்ட இழிசெயலைப்
பொறுக்காது பொங்கியெழுந்து,
ஆன்மீகத்தை புகுத்துகின்ற
அடிவருடிக் கூட்டங்களே - என
ஆர்பரித்து வழக்காட,
அறநெறி மன்றம் சென்ற
பெருமைமிகு பெருஞ்சித்திரனாரே!

பகுத்தறிவுப் பகலவனின் பாதை வழிச் செல்வோம் - என பா, பாடும் கூட்டங்கள் - பலவிருந்தும்- இவ் அறிவில்லாச் செயலுக்குத் தடுப்புச்சுவர் எழுப்பாமல் தூங்கியது என்? தூங்கிய கூட்டத்திற்குத் துளியேனும் சூடு கொடுக்கும் துடிப்பான உங்கள் செயலால், இனியேனும் வெளிவரட்டும்! இரட்டை நிலைநிறந்து தூங்கித் திரியும் திராவிட மணிகள்.

-- இவண். சிறையாளி சீ. முத்துக்குமாரசாமி;
நடுவண் சிறை, திருச்சி-20.

இறப்பையும், உடல்நலிவையும்
இங்கே அரசியல் ஆக்குகின்றனர்!

மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு,

சென்னை உயர்நெறி மன்றத்தில் தாங்கள் முறையீடு செய்த (Writ Petition) உரிமை வழக்குப் பற்றிய விளக்கங்களை "முரசொலி" மூலம் அறிந்திருந்தேன். "இந்து" 13-11-84 பக்கம் 12இல் (கோவைப் பதிப்பு) நடுவரின் கூற்றுகள் வெளியிடப்பட்டன.

உயர்நெறிமன்றத்தின் தீர்ப்பு - நாம் அதைப் பற்றித் திறனாய்வு செய்யக் கூடாது. வேண்டுமென்றால் மேல்முறையீடு செய்யலாம் - அதுதான் முறை. ஆனால் தேவைப்பட்டால் பாராட்டலாம்! அது வழக்கம். ஆனால் தாங்கள் தொடுத்த உரிமை வழக்கில் கூறிய தீர்ப்பு (முறையீட்டை இசைய மறுத்தும், தள்ளுபடி செய்தும்) மாண்புமிகு நடுவர் உணர்ச்சி வயப்பட்டு விட்டார். It was an emotional out burst rather than an essay of reasoning by a progressive mind. இதே நடுவர் வி ஆர். கிருட்டிண (ஐயர்) ஆக இருந்திருந்தால் வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தாலும் சில முக்கியமான கருத்துரைகளை வழங்கியிருப்பார்.

அறிவுடைய சிந்தனையாளர்கள் உறுதியாக "புனிதச் சாம்பலை" ஊர் ஊராக அரசுச் செலவில் எடுத்துச் செல்வதை ஓர் அரசியல் நோக்கான செயலானதாகத்தான் கருதுவார்கள். மறைந்த மாண்புமிகு இந்தியத் தலைமையமைச்சர் திருவாட்டி. காந்தியின் "புனித சாம்பலை" பல இடங்களுக்கும் எடுத்துச் சென்றது அரசியல் நோக்குடன்தான் என்பதற்கு அடிப்படையான உண்மைகள் ஆங்கில ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. கொச்சியில் இருந்து வெளி வரும் கிழமை 'The Week' - Nov. 18-24, 1984 - ஏடு Turbulence Ahead என்ற தலைப்பில் Cover Story வெளியிட்டுள்ளது. பக்கம் 12-இல் இந்தப் "புனித சாம்பல்" எடுத்துச் செல்வது பற்றி பேராயக் கட்சியில் ஏற்பட்ட போட்டியை விளக்கியுள்ளதைக் கீழே தருகிறேன் :

"The faction fights and intrigues in the party surfaced even at the time of mourning. Madya Predesh Chief Minister Arjun Singh took away the urn containing the ashes of Mrs. Gandhi without informing V.C. Shukla, an important Congress I leader of the state. Shukla ultimately had to rush to the railway station to be with the urn.

In Maharashtra the drama was more banal. Chief Minister Vasantadada Petil deputed one of his Ministers Sushil Kumar Shinde, to receive the ashes. Shinde who had by then checked into a Bombay flight, was brought back to Mahrastra Sadan in Delhi. At seven in the morning when be went to receive the ashes, he found that Vasanth Sathe, Union Minister for fertilizer, had already received the urn and was on his way to Delhi airport. Shinde too rushed to the airport. Miss Saroj Khorpade, M.P. from Maharashtra also rushed to catch the same flight. When the flight landed in Bombay, Vasanth Sathe and Shinde agreed to carry the urn jointly. Now Saroj Khorpade came out with the urn meant for Dadra and Nagar Huveli. Finally she was persuaded to return the urn Some other places also saw similiar confusion The original decision had been to take the urns straight to the state capitals. However it was changed to enable Congress leaders to go round with the ashes."

எனவே மறைந்த மாண்புமிகு தலைமையமைச்சரின் "புனித சாம்பலை" எடுத்துச் சென்றது முகாமையான அரசியல் உள்நோக்கங்களுக்குத்தான். அதுவும் அரசுச் செலவில் பேராயக் கட்சியும் அதன் தலைவர்களும் தலைமையமைச்சரின் இழப்பை வைத்து அரசியல் ஊதியம் பெறவும், மக்களின் இரக்கத்தைப் பேராயக்கட்சியின் ஆதரவு ஒப்போலைகளாகவும் மாற்றச் செய்யும் முயற்சிகள்தாம்.

கடந்த 5 நாள்களில் இரண்டு ஆங்கிலப்படங்களுக்குச் சென்றேன் - இரு திரையரங்குகளிலும் இருவகையான செய்திப்படம் திருவாட்டி. காந்தியின் இறப்பு மற்றும் இறுதி ஊர்வலம் காட்டப்பட்டது. நடுவண் அரசின் செய்திச் சுருள் 42, 43. நாட்டின் தலைமையமைச்சர் கொலை செய்யப்பட்ட பின் அவர் பற்றிய செய்திகளை எல்லா மக்களும் காண வாய்ப்பளிக்க வேண்டும் என அரசு இவற்றை நயன்மைப் படுத்த முயலலாம். ஆனால் நாடாளுமன்றத் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பின் இச் செய்திப் படங்களைத்

(தொடர்ச்சி 8- ஆம் பக்கம் பார்க்க)

சாதியும், மதமும் வேதியர் புரட்டு!

அன்புள்ளங்களின் மடல்கள்...

(7-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

திரைப்படுவது அறநெறிப்படி முறையாகாது. பக்களை உணர்ச்சி வயப்படுத்தி அரசியல் ஊதியம் தேடும் முயற்சியாகும். உணர்ச்சி வயப்படுத்தலாம் - இன நலன், மொழிநலன் மற்றும் பிற பொது நலன்கள் அழிவுறும் போதும் அல்லது நலிவுறும் போதும். அவற்றைத் தேர்தல்கள் போதும் மக்களுக்கு எடுத்துக் கூறலாம்.

ஆனால் தலைவர் ஒருவர் இறந்ததை வைத்தும் - உடல் நலிவுற்றதை வைத்தும் அரசியல் நடத்துவது குடியரசே அன்று. அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன், கென்னடி போன்றவர்கள் திடீரென வன்முறையில் மறைந்தார்கள். அமெரிக்க அரசியல், தலைவர்களின் மறைவில் நடக்கவில்லை. சோவியத்து நாட்டில் அண்மையில் தலைவர் பிரசுனேவ், பின் தலைவர் ஆண்டிரோபோவ் ஆகியோர் அடுத்தடுத்து மறைந்தனர். எந்தச் சிக்கலும், குழப்பமும் இன்றி அரசியல் தொடர்ந்தது - தொடரும்.

தமிழினத்தின் நலிவுகள், சிதைவுகள் தனித்தன்மை (Unique) யுடையவை நாளாகுமய்யா இவை நீங்க! அன்புடன்

- ப. பத்மநாபன், வழக்கறிஞர், சோமனூர்.

மாந்தமானத்திற்குப் போராடினீர்கள்!

பெருமதிப்பிற்குரிய பாவலரேறு-பெருந்தகையீர்!

இன்றைய உலகில் - அறிவு என்ற மாந்தமானம் கொச்சைப் படுத்தப்படுவதை மிகத் துணிச்சலுடன் - அறிவாண்மையுடன் - எதிர்த்த பேராண்மை மிக்க - தமிழறிஞர் - தன்மான மிக்க தமிழர் - தரை மீது வாழும் "மாந்தர்" தாங்கள் மட்டுமே!

என் உள்ளம் இதனை எண்ணி-இறும்பூது எய்துகின்றது!

புத்தரும், பெரியாரும் பிறந்த புலமிது! - என்பதைப் புத்துலகுக்குப் - புதுக்கிய வரலாற்றுவரி தங்கள் வீரத்தால் பறைசாற்றப் பெறுகின்றது!

அன்றொரு, நாள்-தன்னந்தனியராய் இனமானம் காக்க உயர்நடுவர் மன்றத்து உறுமிய அரிமா - பெரியார்!

இன்றோ - (10 11 84) மாந்தமானத்திற்குத் - தரமிக்கத் தலை மகனாய்த் தலை நிமிர்ந்த தமிழ்மகனாய்ச் சந்தனத்தில் வெந்த சாம்பலய்யா இந்திரா காந்தியிலை என்பதைத் தட்டிக் கேட்டதால் இத் தரையுள்ளளவும் தங்கும் தங்கள் வீரஞ் செறிந்த அறிவுப் புகழ்! தங்கள் வழித் தோன்றல் "தீக்குச்சி"

தொ. சானகிராமன் சென்னை.5

மதிப்பிற்குரிய ஐயா! பாவலரேறு அவர்கட்குத் தங்கள் அன்புடனும் பண்புடனும் தலைதாழ்த்திய வணக்கம். எல்லா நலனும் வளனும் குறைவின்றிப் பெற்றுத் தாங்கள் பல்லாண்டு வாழ்ந்துயர எல்லாம் வல்லவனை வேண்டுகிறேன்.

மதச்சார்பற்ற நாடெனச் சொல்லிக்கொண்டு நடந்துவரும் நாட்டு நடப்பைப் பார்த்து உடனுக்குடன் எதிர்ப்புத் தெரிவித்த உம் மறத்தன்மையை அறிந்து, அரிமாவின் மறத்தன்மை அரிமாவுக்குத்தான் வரும் என்று பெருமை கொண்டேன்.

வி. வில்வநாதன் - பெங்களூர்-16.

Medieval Overtones

Sir. - The Madras High Court has dismissed Sri Perunchithiranar's writ petition questioning the Government's spending tax-payers' money for taking around the urns containing Mrs. Gandhi's ashes. (I.E.Nov. 13). The petitioner had contended that as he was required by the Indian Constitution (Article 42) to promote scientific temper, he was aggrieved to see the Government "practising this unscientific ceremony," and using government machinery and funds to further its political cause.

Not satisfied with merely dismissing this writ petition as "infructuous," Justice S Natarajan has seen fit to call it a "sacrilege," and to state, 'Profanity has blurred the vision and dwarfed the thought of the petitioner, leading to failure to realise these higher values." The petitioner's action has been termed "diabolical" by the court.

The tone and language of the court's decision is reminiscent of a medieval religious tribunal and do not appear to be suited to a modern secular court Another fact that emerges from the decision is this while anyone in India may freely express and propagate religious sentiments no one may express his or her commitment to scientific temper without being labelled sacrilegious or diabolical - or at the very mildest, being accused of bad taste. We are tolerant of every "ism", including the rankest superstitions and the ugliest and most violent distortions of religion except rationalism.

Even if the petitioner was mistaken in his assessment of the mood of public grief over Mrs. Gandhi's death, was it really necessary for the Court to discredit his basic motives: concern for scientific temper, and vigilance regarding the use of public money? VASANTHA SURYA
Indian Express-24.11.54

அன்பார்ந்த ஐயா அவர்கட்கு வணக்கங்கள்பல. ஜெய்பீம கலப்புடன உரித்தாகுக.

தங்களின் உ.த.மு.க பணியினை விளக்கும் "தமிழ்நிலம்" எங்களின் படிப்பகத்திற்குக் கிடைக்கப் பெறுகிறோம். உங்களின் கொள்கைப்படி மிகச் சிறந்த இதழாக இருக்கும் அவ் வேட்டின் நவம்பர்மாத இதழ் எண் 48 எங்களின் அனைவரின கவனத்தையும் ஈர்த்துக் கொண்டது. அதில், மறைந்த தலைமையமைச்சர் திருவாட்டி காந்தியின் சாம்பலை (அஸ்தியை)ப் பற்றிய சென்னை உயர்நெறி மன்றத்தில் தாங்கள் தொடுத்த வழக்கின் விளக்கங்கள் இருந்ததே அதற்குக் காரணம்! எவ்வளவோ பகுத்தறிவைப் பறைசாற்றும் அமைப்புகள் இந்தியநாட்டில் இருந்தும், குறிப்பாகத் தமிழ்நாட்டில் சீர்திருத்தக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கும் அமைப்புகள் இருந்தும், மிகவும் துணிச்சலுடன் எவருமே செய்யாத செயலினைத் தாங்கள் செய்திருந்தது விண்ணளவு பாராட்டுதலுக்குரிய செயலாகும். அதே நேரத்தில் உடையணிந்த வழக்குரைஞர்கள் பேசிய சொற்களைப் படிக்கும்போது இந்தியர்களின் தரம் எவ்வளவு அளவுள்ளது என்பதை எண்ணவேண்டி உள்ளது. அதனால் எங்களின் மனம் மிகவும் வருந்தியது. அதையும் பொருட்படுத்தாமல் தீர்ப்பு எப்படியாக இருந்தாலும் தாங்களே தமிழில் வழக்காடினீர்கள். அதன் விளக்கங்களை நாங்கள் எல்லாம் அறியும்படியாகச் செய்திவெளியிட்ட INDIAN EXPRESS இதழுக்கும் "தமிழ்நிலத்"திற்கும் எங்களின் நன்றி கலந்த பாராட்டுகளையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். தங்களின் துணிச்சலான இது போன்ற செயல்கள் மென்மேலும் தொடரவேண்டுமென வாழ்த்தி எங்களின் அன்பு மடலை அனுப்புகிறோம். "நன்றி" இங்ஙனம்

- நா. செல்வபாண்டியன், செயலாளர், அம்பேத்கார் பொதுப்பணி மன்றம், வேலூர்-6

0 ஐயா, 'தமிழ்நிலம்' கண்டேன்.

இந்திராவின் பிணத்தையும் பின் சாம்பலையும் வைத்துக்கொண்டு பார்ப்பனக் கும்பல் போட்ட ஆட்டத்தைக்கண்டு பலர் மனக்கொதிப்படைந்திருந்தாலும், தாங்களே அதனைத் துணிச்சலாக வெளிக்காட்டி உயர்நெறி மன்றத்தில் வழக்காடியுள்ளீர்கள்! இத்தகைய மறத்தன்மை வாய்ந்த தங்களை எங்கள் தலைவரெனச் சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுகிறோம். காலிப்பயல்களைப் போல் இரண்டு 'வழக்குரைஞன்'கள் தங்களிடம் நடந்து கொண்டதைப் படித்ததும் அதிர்ந்து போனேன். 'அவன்'களின் செய்கை சட்டக் கல்லூரி மாணவர்கள் என்று என் போன்றோர் சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்பட வைத்து விட்டது. எடுபிடி எச்சில் நாய்களால் தங்களின் விடுதலைப்பணி தடைப்படாது என நாங்கள் அறிவோம் - நீவண் — க. இராயவேல், சென்னை 21

0 அன்பிற்குரிய ஐயா, வணக்கம். மறைந்த இந்திரா அம்மையாரின் சாம்பலை, அரசு நாடு,நாடாக எடுத்துச்சென்றதும், அதற்கு அரசு மதிப்பு (மரியாதை) செலுத்தியதும் பகுத்தறிவிற்கு ஒவ்வாத ஒன்றாகும். இதனை எதிர்த்துத் தாங்கள் அறமன்றத்தில், சிறப்பான, சிந்திக்கத்தக்க செய்திகளை எடுத்துக் கூறி வழக்காடியதும், மிகவும் பாராட்டுதற்குரிய, ஒன்றாகும். தந்தை பெரியார் அவர்கள் அறமன்றத்தில் 'அறிக்கை' மட்டும் கொடுத்துத் தீர்ப்பை வெளிப்படுத்துமாறு, கூறிவிடுவார்கள். தாங்கள் நேரிடையாகவே உயர்நெறி மன்றத்தில் பகுத்தறிவுக் கருத்துகளை எடுத்து வழக்காடியது பெருமைப் படத்தக்க செய்தியாகும். தங்கள் வழக்கிற்குத் தீர்ப்பு கொடுத்ததனைத், 'தந்தை பெரியார்' அவர்களால் வழக்குத் தொடரப்பட்ட 'மலையப்பன்' (மாவட்ட ஆட்சித் தலைவர்) வழக்குத் தீர்ப்பினைப் போலத்தான் நாங்கள் கருதுகின்றோம்.

தாங்கள் அரசியலமைப்பின் அடிப்படைக் கடமையை, வரி செலுத்தும் ஒரு குடிமகன் என்கின்ற முறையில் அறமன்றத்திற்கு எடுத்துச் சென்று வழக்காடியுள்ளீர்கள். ஆனால் தீர்ப்பு! தந்தை பெரியார் அவர்களின் "நீதி கெட்டது யாரால்?" எனும் பொத்தகத்தின் கருத்திற்கு ஒத்ததாக அமைந்து உள்ளது.

வழக்கினைத்தொடர்ந்து 'மேல் மன்றத்தீர்ப்பிற்கு எடுத்துச் சென்றுள்ளது மிகவும் தேவையான ஒன்றாகும். தீர்ப்பு எப்படியிருப்பினும், பகுத்தறிவாளர் என்கின்ற அடிப்படையில் தாங்கள் செய்கின்ற செயல் மகிழ்ச்சிக்குரியதாகும். நமது கடமையைத் தொடர்ந்து செய்ய எப்படிப்பட்ட எதிர்ப்பு வந்தாலும் அதனை ஏற்போம்.

சென்னை, உயர்நெறி மன்றத்தில் தங்களைக் 'கொலை' மிரட்டல் செய்த வழக்கறிஞர்களின் கொட்டத்தை அடக்குகின்றவகையில் தமிழினம் ஒன்றுபட்ட ஆற்றலாக வெளிப்படவேண்டும் என்பதுவே எனது அவா. தங்களை மிரட்டுதலுக்கு உள்ளாக்கியவர்கள் தமிழினத்தையே மிரட்டுதலுக்கு உள்ளாக்கியவர்களாகத்தான் தோன்றுகின்றார்கள். 'மேல் மன்றத்திற்கு' எடுத்துச் செல்ல ஆகும் செலவிற்குத் தாங்கள் 'தமிழ்நிலம்' மூலம் செய்தி வெளியிட்டால், நன்கொடை தண்டல் செய்யலாம். வழக்கினைப் பொறுத்தவரை பொதுவான வரவேற்பே மக்களிடையே உள்ளது. தங்கள் முயற்சிக்கு எங்கள் ஒத்துழைப்பு என்றும் உண்டு, நன்றி.

இலால்குடி க. நாகராசன், திருச்சி-13.

0 பேரன்பின் இனியதமிழ் நலஞ்சான்ற ஐயா, வணக்கம். நலம். நலஞ்சிறக்க வாழ்த்துகின்றேன், தமிழ்நிலம இதழெண் 48, நேற்று மாலை கிடைக்கப் பெற்றேன். ஆரவாரமான மூடநம்பிக்கை மிகுந்த 'அஸ்தி' எனும் உடல் சாம்பலுக்கு அரசு செலவிட்ட கோடிக்கணக்கான உருபா மக்கள பணம்தானே என்பதாக வழக்குமன்றத் தலைவரும அதற்குச் சார்பாகவே பேசியுள்ளார். தங்களின் வழக்குத் தொடர்பான செய்திகள் இந்தியன் எக்சுபிரசு, இந்து, தினமணி, விடுதலை, முரசொலி நாளிதழ்களிளெல்லாம் வந்திருந்தன வழக்கு மன்ற விளக்கங்களும் வந்திருந்தன. இவ்வழக்குத் தொடர்பாகக் கடந்த சினிமித்திரன்' எனும் இதழ் 18 ஆம் பக்கத்தில் சீப் பாப்புலாரிட்டி' எனும் தலைப்பில் செய்தி வெளியிட்டுத் தனது உணர்ச்சியைத் தணித்துக்கொண்டது. ஒருவேளை இதனைத் தாங்கள் பார்த்திருக்கலாம், பாராதும் இருந்திருக்கலாம். எனினும் அச்செய்தியை இம்மடலுடன் இணைத்துள்ளேன். தங்களின் அன்பு நிறைந்த

— குழந்தை ஈகவரசன், திருச்சி-14

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம, அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும் பதிவு எண்: TN/MS C)/657

அனுப்புதல்: பெறுநர். நூல்-அஞ்சல்
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு, திரு திருவாட்டி
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்
கழக அருட்கொடையாளர்கள்.
தென்மொழி ந.முத்துக்குமரன், பல்லடம் மா.ஆறுமுகம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.